

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 13 ஆம் நாள் (29-07-2026 புதன்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



## தென்னாட்டின் "முதற்சங்கம்" வரலாற்று மண்டபத்திற்கான

## அடிக்கல் நாட்டும் விழா – ஆனி 20 (04-07-2026)

படம் : சற்குணராசா நிதர்சன் (GL Tharshan)



# தென்னாடு குருமரபு வாழ்த்து

ஐம்பூத நாதரின் திருவரு ளாலும்
  ஆலமர் செல்வரின் குருவரு ளாலும்
பைந்தமிழ்ச் சார்ந்துநற்  சிவநெறி சிறக்கப்
  பாரினில் நன்மைகள் ஓங்கத்தென் னாடு
செந்தமிழ் ஆகமச் சிவமடம் உதயம்
  சீர்திகழ் மடம்இதன் செய்பணி நாளும்
எங்கனும் பொலிந்தருள் விளங்கிட வேண்டி
  எழிற்குரு மரபது தழைகவே மாதோ.

இயற்றியவர் : சிவத்திரு சு.குஞ்சிதபாதம்
திருவாவடுதுறை ஆதீனப் புலவர்.
05-07-2026.



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம்.   www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# தென்னாட்டின் முதற்சங்கம் தென்னாட்டில் மீண்டும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து இந்த பசுந்தமிழினை பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தாக பரஞ்சோதி முனிவரால் போற்றப்படும் கடல்கொண்ட தென்னாட்டின் வரலாற்றினை, பண்பாட்டு ஆழத்தினை, தொன்மை பெருமைகளை இனி வரும் சமுதாயம் அறியவேண்டும் என்ற நோக்கில், அதன் ஒரு சிறிய அமைப்புருவை உருவாக்கவேண்டும் என்ற சிந்தனையை கண்ணுதற் பெருங்கடவுள் உள்நின்று உணர்த்தியதன் பொருட்டு பெயரிடப்பட்டு உருவாக்கப்பட்டதே இந்த தென்னாடு ஆகும்.

**கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து**
**பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழ்ஏனை**
**- பரஞ்சோதி முனிவர்**

**நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி**
**நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன்காண்**
**- நாவுக்கரசு சுவாமிகள்**

தலைச்சங்கம் அதாவது முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் பற்றிய செய்தியை இறையனார் அகப்பொருள் நூலுக்கு நக்கீரனார் எழுதிய உரையில் இருந்து தெரிந்து கொள்கிறோம். மற்றும் பல இலக்கிய குறிப்புகளும் அதற்கு வலுச்சேர்க்கின்றன. இந்த வரிசையில் தென்னாட்டில் முதற்சங்கம் நினைவாக ஒரு வரலாற்று கட்டடம் ஒன்றை நிறுவவேண்டும் என்ற சிந்தனையில் திருவருள் துணையுடன் கடந்த திங்கள் அடிக்கல் நாட்டும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

காரைநகர் திண்ணபுரம் ஈழத்து சிதம்பரம் திருக்கோயில் திருக்குடநீராட்டிற்காக வருகை தந்திருந்த தென்னிந்திய ஆதீனங்களின் குருமகா சந்நிதானங்கள் மற்றும் திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானங்களின் ஆணையின் வண்ணம் இலங்கை வருகை தந்த ஆதீனப் புலவர் ஐயா, இலங்கை சுவாமிகள் ரிசி தொண்டுநாதன் அவர்கள் முன்னிலையில் இந்த அடிக்கல் நாட்டு விழா சிறப்பாக நடந்தேறியது.

இந்தக் கட்டடம் **"முதற்சங்கம்"** எனப் பெயரிடப்பட்டு, இலக்கியங்களில் உள்ள முதற்சங்க கூறுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் உருவாக்கப்படும். இங்கே மீண்டும் சைவமும் தமிழும் தழைத்து ஓங்கும் வகையில் நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படும்.

இந்த நிகழ்விற்கு சிவ ஆ.ஆறுதிருமுருகன் ஐயா, சிவ மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஐயா மற்றும் தவத்திரு. வேலன் சுவாமிகள் அழைக்கப்பட்டிருந்த போதிலும் ஆறுதிருமுருகன் ஐயா பிறநிகழ்வு காரணமாகவும், மற்றவர்கள் இலங்கையில் இல்லாத காரணத்தாலும் கலந்து கொள்ள முடியவில்லை. சிவ மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஐயா புலனத்தின் ஊடாக தனது வாழ்த்தினை தெரிவித்திருந்தார்கள்.

இந்த நிகழ்வின் ஆரம்ப பூசை மற்றும் பூமிபூசை வழிபாடுகளை தென்னாடு சிவமடத்தின் பிரதம அருச்சுனைஞர் சிவ பிரதாபனார் ஆற்றியிருந்தார். அதில் தென்னாடு சிவமடம் சார்பாக திருமதி. சிவநேசராணி, திருமதி. சிவநேசமலர் மற்றும் திருமதி. யசீலா அவர்கள் கலந்து கொண்டனர். அடிக்கல் நாட்டும் நேரக்கணிப்பினை சிவ நடராசா யோகேந்திரன் (தாவடி / சுவிசர்லாந்து) அவர்கள் எடுத்து கொடுத்திருந்தார்கள். நிகழ்வுகளை அடியேன் திருவருள் துணையுடன் ஒருங்கிணைத்திருந்தேன்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(29-06-2026) – காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) திருக்குட நன்னீராட்டில் திருமுறைகள் ஓதி சிறப்பித்திட, யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த மூத்த ஓதுவார் **‘பத்மசிறி’** திருத்தணி சுவாமிநாதன் ஐயா அவர்கள் தென்னாடு ஐம்பூதநாதர் சன்னிதியில் வழிபாடு ஆற்றினார்கள். (29-06-2026) – தென்னாட்டின் எழுபத்தொறாவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300, ஆடவை நல்லோரை, ஆனித் திங்கள் 15 ஆம் நாள் (29-06-2026 – திங்கட்கிழமை) ஆனி நிறைமதி நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில், தருமபுரம் ஆதீன திருச்சிராப்பள்ளி மௌனமட கட்டளை விசாரணை முனைவர் ஶ்ரீமத் திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள், மூத்த ஓதுவார் ‘பத்மசிறி’ திருத்தணி சுவாமிநாதன் ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் ஐயா அவர்கள், சிவத்திரு. சிவஞானசுந்தரம் தம்பு அவர்கள், யாழ்விஷன் இந்துமன்ற முதல்வர் சிவத்திரு. கந்தையா சுசீந்திரன் அவர்கள், சிவத்திரு. சண்முகராஜா சண்முகநாதன், சிவத்திரு. தியாகராஜா பரமேஸ்வரன் அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறையின் மூத்த விரிவுரையாளர் பேராசிரியர் பொன்னுத்துரை சந்திரசேகரம் அவர்கள், அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி. கா. கமலநாதன் அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், தமிழிசை மரபையும் பன்னிரு திருமுறையையும் தன் மூச்சாகக் கொண்டு, அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தன்னலம் கருதாது இறைவனுக்குத் திருமுறைப் பண்ணிசையால் இசையாராதனை செய்து, இந்தியாவின் உயரிய ‘பத்மசிறி’ விருதை பெற்று, ஓதுவார் மரபிற்குப் பெருமை சேர்த்துள்ள தமிழகத்தின் மூத்த ஓதுவார் ‘பத்மசிறி’ திருத்தணி சுவாமிநாதன் ஐயா அவர்கள், கௌரவித்து சிறப்புச் செய்திடவும் திருவருள் கூடியிருந்தது. தருமபுரம் ஆதீன திருச்சிராப்பள்ளி மௌனமட கட்டளை விசாரணை முனைவர் ஶ்ரீமத் திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள் திருமுன்னிலையில், ஐயா அவர்களின் திருவடி வணங்கி, பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா மற்றும் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோரால் சிறப்புச் செய்யப்பட்டு கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து, தருமபுரம் ஆதீன திருச்சிராப்பள்ளி மௌனமட கட்டளை விசாரணை முனைவர் ஸ்ரீமத் திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், மூத்த ஓதுவார் ‘பத்மஸ்ரீ’ திருத்தணி சுவாமிநாதன் ஐயா அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் எழுபத்தொறாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து, ஏனையோருக்கும் இதழ்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) திருக்குட நன்னீராட்டில் தமிழக சைவ ஆதீனங்கள் எழுந்தருளுவதற்கும், தமிழக ஓதுவார்கள், சிவாச்சாரிய பெருமக்கள் திருக்குட நன்னீராட்டில் பங்கேற்று சிறப்பித்திடவும், திருக்கோயில் வரலாற்றையும், திருப்பணி படங்களைத் தாங்கி, திருக்குட நன்னீராட்டுச் சிறப்பிதழாக வெளியிடப்பட்டுள்ள தென்னாடு இதழின் மேலதிக பக்கங்கள் மற்றும் கூடுதல் பிரதிகளுக்குமான நிதிப் பங்களிப்பினை நல்கி வருகின்ற சிவத்திரு. சண்முகராஜா சண்முகநாதன், சிவத்திரு. தியாகராஜா பரமேஸ்வரன் ஆகியோர்களுக்கான கௌரவிப்பும் சிறப்பாக இடம்பெற்றது. தொடர்ந்து அடியார்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

(30-06-2026) – காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) திருக்குட நன்னீராட்டில் திருமுறைகள் ஓதி சிறப்பித்திட, மறைக்காடு சிவகுமார் ஓதுவார் அவர்கள் தென்னாடு வருகை தந்தார்கள். (02-07-2026) – காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) திருக்குட நன்னீராட்டில் கலந்துகொண்டு சொற்பொழிவுகள் ஆற்றி சிறப்பித்திட திருவாவடுதுறை ஆதீனப் புலவர் சுப்பிரமணியம் குஞ்சிதபாதம் ஐயா அவர்கள் தென்னாடு வருகை தந்தார்கள். (03-07-2026) – காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) திருக்குட நன்னீராட்டில் எழுந்தருளி சிறப்பித்திட வருகை தந்திருந்த, திருக்கயிலாய பரம்பரை செங்கோல் ஆதீனம் 103 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமாசாரிய சுவாமிகள், பழனி சாதுசாமிகள் மட குருமகாசந்நிதானம் தவத்திரு சாது சண்முக அடிகளார், தென்சேரிமலை ஆதீனம் குருமகாசந்நிதானம் தவத்திரு முத்துசிவராமசாமி அடிகளார், தருமபுரம் ஆதீனம் திருவையாறு அருள்மிகு பஞ்சநதீசுவரர் சுவாமி திருக்கோயில் கட்டளை விசாரணை சீர்வளர்சீர் சொக்கலிங்க தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் தென்னாட்டில் எழுந்தருளியிருந்தனர்.

(04-07-2026) – காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) திருக்குட நன்னீராட்டில் எழுந்தருளி சிறப்பித்திட வருகை தந்திருந்த, திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம் 18 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள், திருக்கயிலாய பரம்பரை பேரூர் ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் ஆகியோர் தென்னாட்டில் எழுந்தருளியிருந்தனர்.

(04-07-2026) – தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் புதிதாக அமையப்பெற உள்ள **“முதற்சங்கம்”** வரலாற்று நினைவு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 ஆனித் திங்கள் 20 ஆம் நாள் (04-07-2026) சனிக்கிழமை அன்று தமிழக சைவ ஆதீன குருமகாசந்நிதானங்கள் எழுந்தருளலுடன் மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

(09-07-2026) – தென்னாடு சைவ மாணவர் சபையின் கலந்துரையாடல் இடம்பெற்றது. அன்றைய நாளில் தென்னாடு முதல்வர் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தார். இக்கலந்துரையாடலில் ஆலமர் அறநெறி, நிறைமதி உழவாரம் போன்ற அடுத்த கட்ட பணிகள் கலந்துரையாடப்பட்டன. (12-07-2026) – ஆனித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (17-07-2026) – சுவிசர்லாந்தை சேர்ந்த யோகன் ஐயா அவர்கள் வருகை தந்து ஐம்பூதநாதர் சன்னிதியில் வழிபாடு ஆற்றியிருந்தார்கள். அன்றைய நாளில் ஆடிப்பிறப்பு சிறப்பு வழிபாடுகளுடன் தென்னாடு பெருங்கோயிலிற்கான நிலையம் பார்த்தாலும் இடம்பெற்றது. (22-07-2026) – சுந்தரர் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (26-07-2026) – ஆடித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# சீர்வளர்சீர் ஞானவொளி அடிகளார் பீடம் ஏறும் பெருவிழா






தமிழ்நாட்டில் சமயத் துறைகளிலும் திருக்கோயில் வழிபாடுகளிலும் திருமுறைகளை முன்னிலைப்படுத்தி தெய்வத்தமிழ் முன்னிற்க வேண்டும் என்ற நோக்கோடு, சென்ற நூற்றாண்டில் சைவசித்தாந்த சண்டமாருதம் சூளை சோமசுந்தர நாயகரின் மாணாக்கர் ஆகிய அருட்திரு. மறைமலை அடிகள் தெய்வத்தமிழ் வழிபாட்டு முறைகளை அமைத்து வழிகாட்டினார். அவரது வழிவந்த மாணாக்கர் இளவழகனார் என்னும் சிவத்திரு. அழகரடிகள் திருக்குறள் பீடம் அமைத்துத் தமிழ் வழிச் சடங்குகளைப் பரப்பினார். அவரது தலைமாணாக்கர் சிவத்திரு. ஒளியகம் ந.ரா. ஆடலரசு ஐயா, பல்லாயிரக் கணக்கான மக்களுக்குத் தமிழில் தீக்கைகள் வழங்கி சைவம் பரப்பினார்.

அவ்விருபெரும் குரவர்களிடம் தீக்கைப் பெற்ற சிவத்திரு. ஒளியகம் ந.ரா. ஆடலரசு ஐயாவின் மகனும் மாணாக்கருமான **'சீர்வளர்சீர் ஞானவொளி அடிகளார்'** (ஒளியகம் ந. ஒளியரசு), கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட உலக நாடுகளில் தமிழ் வழித் திருமணங்கள், திருக்குடநன்னீராட்டுகள் மற்றும் தீக்கைகளையும் வழங்கி வருகின்றார். தன் தந்தையாகவும் குருநாதராகவும் வாய்த்த சிவத்திரு. ஒளியகம் ந.ரா.ஆடலரசு ஐயா அவர்களின் எண்ணத்தைத் தன் காலத்தில் நிறைவேற்ற வேண்டும் என்ற சீர்வளர்சீர் ஞானவொளி அடிகளார் ஒளியகம் ந.ஒளியரசு ஐயா அவர்களின் திண்ணிய எண்ணத்தை அறிந்து, ஐயா அவர்களிடன் தீக்கைப் பெற்ற மாணவர்கள் முயன்று குருவருளால் ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடியில் அருள்தரும் நீள்நெடுங்கண்ணி அம்மை உடனமர் அருள்மிகு அண்டம் முழுதுடையார் திருக்கோயில் தென்புறத்தில் **'தமிழ்ச்சைவ ஞானத் திருமடம்'** உருவாக்கினர்.

இத்திருமடத்தின் **'சீர்வளர்சீர் ஞானவொளி அடிகளார் பீடம் ஏறும் பெருவிழா'** கடந்த ஆடித்திங்கள் 3 ஆம் நாள் (19-07-2026) காலை 09.00 - 10.30 மணியளவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தெய்வத் தீந்தமிழ்த் திருமுறைகள் ஓதி வேள்வி வழிபாடுகளுடன் அடிகளார் பீடம் ஏறியதைத் தொடர்ந்து, மாலை வேளையில் அருட்குருநாதரின் பத்திச் சிறப்புமிக்க திருவீதி உலாவும் திருவருள்மிகு கொலுக்காட்சியும் சிறப்பாக நடைபெற்றன. குருமகாசந்நிதானங்களும் சான்றோர்களும் பங்கேற்ற இந்நிகழ்வு, தமிழ்ச் சைவச் சமய வரலாற்றில் ஓர் சிறப்புத் திருப்புமுனையாக குருவருளும் திருவருளும் பெருகிட நடந்தேறியுள்ளது.

தமிழ்ச் சைவ ஞானத் திருமடம் பீடத்தின் ஏறி அருளும் சீர்வளர்சீர் ஞானவொளி அடிகளாரின் திருவடிகளை போற்றி வணங்கி திருவருள் பெற்று உய்வோம்.

**திருச்சிற்றம்பலம்**

# திருமுறை கலாநிதி அருட்குருநாதர் தவத்திரு சீர்வளர்சீர் சிவாக்கர தேசிக சுவாமிகளின் ஆசிரியத் திருமுழுக்குப் பெருவிழா










திருமுறை கலாநிதி அருட்குருநாதர் தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள் அவர்களுக்கு, **'திருஞானசம்பந்தர் ஆதீனமாக'** உயர்வு அளிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆசிரியத் திருமுழுக்குப் பெருவிழா, திருக்கயிலாயப் பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம் 18 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சத்திய ஞானதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் தலைமையில், திருப்புகலூரில் அமைந்துள்ள வேளாக்குறிச்சி திருமடத்தில் கடந்த 16-07-2026 வியாழக்கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஈரோடு மாவட்டம் கோபி வெள்ளாளர் பாளையத்தில் 'திருஞானசம்பந்தர் திருமுறைத் திருமடம்' அமைத்துச் சைவநெறியைக் காத்துப் பேணி வருகின்ற **"தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள்"** தமிழ்நாட்டின் திருவையாற்றுப் பதியைச் சேர்ந்தவர். இளமை முதலே திருமுறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், தருமபுர ஆதீனத் தேவாரப் பயிற்சிப் பள்ளியில் முறைப்படி திருமுறைப் பண்ணிசையையும், அதனைத் தொடர்ந்து கர்நாடக இசையையும் கற்றுத் தேர்ந்தவர். அத்துடன் தமிழ்ப் புலவர் பட்டமும் பெற்றுத் திகழ்கின்றார். உலகம் முழுவதும் பன்னிரு திருமுறை முற்றோதல்களை முன்னெடுத்துச் செல்வதோடு, அன்னம் பாலிப்பு உள்ளிட்ட சமூக நற்பணிகளையும் செவ்வனே செய்து வருகின்றார். மேலும், கட்டணமில்லாத் தேவாரப் பயிற்சிகளை நடத்தியும், திருக்கோயில்களில் திருமுறை முற்றோதல் நிகழ்வுகளையும் ஆன்மீக அருளுரைகளையும் வழங்கி, மக்களின் நல்வாழ்விற்குத் தூண்டுகோலாக விளங்குகின்றார்.

இத்தகைய சைவப் பெருமகனாரான திருமுறை கலாநிதி அருட்குருநாதர் தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் ஆசிரியத் திருமுழுக்குப் பெருவிழாவில், பலதரப்பட்ட அடியார் பெருமக்களும் திருமுறைச் சான்றோர்களும் திரளாகக் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற்று உய்ந்தனர்.

திருச்சிற்றம்பலம்



# கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்த தென்னாட்டின் "முதற்சங்கம்" வரலாற்று மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் புதிதாக அமையப்பெற உள்ள **"முதற்சங்கம்"** வரலாற்று நினைவு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 ஆனித் திங்கள் 20 ஆம் நாள் (04-07-2026) சனிக்கிழமை அன்று மாலை 4.30 மணியளவிலான நல்வேளையில் தமிழக சைவ ஆதீன குருமகாசந்நிதானங்கள் எழுந்தருளலுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

திருவருள் உள்நின்று உணர்த்தியதின் பயனாக, வீறியெழல் (சார்வரி) ஆண்டு விடைத் திங்கள் (வைகாசி) 21 ஆம் நாள் (03-06-2020) அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட எங்கள் சிவமடமானது, தற்போது ஆறு ஆண்டுகளைக் கடந்து சைவத்தினையும், தமிழ்ப் பண்பாட்டினையும் பேணிப் பாதுகாப்பதற்கும் அவற்றினை அடுத்த தலைமுறையினரிடம் ஊடுகடத்துவதற்கும் திருவருட்துணையுடன் செயலாற்றி வருகிறது. இந்தவரிசையில் அடுத்த படிக்கல்லாக, எல்லாம்வல்ல அருள்மிகு மனோன்மணி அம்மன் உடனுறை தென்னாடு ஐம்பூதநாதப் பெருமான் உள்நின்று உணர்த்தியதன் வண்ணம், கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து பசுந்தமிழை ஆய்ந்த கடல்கொண்ட தென்னாட்டின் முதலாம் தமிழ்ச்சங்கம் நினைவாக, அமையப்பெற இருக்கின்ற **"முதற்சங்கம்"** என்ற ஒரு வரலாற்றுக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு தமிழக சைவ ஆதீன குருமகாசந்நிதானங்கள் எழுந்தருளலுடன் சிறப்பாக இடம்பெற்றது.

ஐம்பூதநாதரின் திருவருளால் அன்றைய நாளில்,



**திருக்கயிலாயபரம்பரைதருமபுரம்ஆதீனம்27ஆவதுகுரு மகாசந்நிதானம்சீர்வளர்சீர்மாசிலாமணிதேசிகஞானசம் பந்த பரமாசாரிய சுவாமிகள், திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம் 18 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள், திருக் கயிலாய பரம்பரை செங்கோல் ஆதீனம் 103 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமாசாரிய சுவாமிகள், திருக்கயிலாய பரம்பரை பேரூர் ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், பழனி சாதுசாமிகள் மடத்தின் குருமகாசந்நிதானம் தவத்திரு சாது சண்முக அடிகளார், தென்சேரிமலை ஆதீன குருமகாசந்நிதானம் தவத்திரு முத்துசிவராமசாமி அடிகளார்** ஆகிய தமிழக ஆறு சைவ ஆதீன குருமகாசந்நிதானங்கள் ஒன்றாக எங்கள் தென்னாடு சிவமடத்தில் எழுந்தருளியிருந்தனர்.

எழுந்தருளிய குருமகாசந்நிதானங்கள் ஐம்பூதநாதர் சன்னிதியில் வழிபாடு ஆற்றியதைத் தொடர்ந்து, குருமரபை வாழ்த்தும் கொலுக்காட்சி வழிபாடுகளும் அருளாசிகள் வழங்கலும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து குரு மகாசந்நிதானங்கள் வீதிவலமாக எழுந்தருளி, முதற்சங்கம் மண்டப அமைவிடத்தில் அடிக்கல் நாட்டல் நிகழ்வு இடம் பெற்றது.

தென்னாடு முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இவ்விழா வில், குருமகாசந்நிதானங்களுடன், திருவாவடுதுறை ஆதீன 24ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளின் அருளாணையின் வண்ணம், திருவாவடுதுறை ஆதீனப் புலவர் சுப்பிரமணியம் குஞ்சிதபாதம் ஐயா அவர்களும், தருமபுரம் ஆதீனம் திருவையாறு அருள்மிகு பஞ்சநதீசுவரர் சுவாமி திருக்கோயில் கட்டளை விசாரணை சீர்வளர்சீர் சொக்கலிங்க தம்பிரான் சுவாமிகள், தருமபுரம் ஆதீனம் திருச்சிராப்பள்ளி மௌன மடம் கட்டளை விசாரணை முனைவர் சீர்வளர்சீர் மௌன திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள் ஆகியோரும் இணைந்திருந்தமை திருவருள் சிறப்பாகும்.

மேலும் கோப்பாய் சுப்பிரமணிய கோட்டத்தின் தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், கோப்பாய்



ஆசிரியர் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் ஐயா அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

தமிழக ஆறு சைவ ஆதீன குருமகாசந்நிதானங்கள் ஒன்றாக எழுந்தருளி சிறப்பித்திருந்த இந்நிகழ்வு ஈழத்து சைவ வரலாற்றின் ஓர் முக்கிய பதிவாகவும், தென்னாட்டின் வளர்ச்சியில் ஓர் முக்கிய படிக்கல்லாகவும் அமைகின்றது.

# முதற்சங்க கட்டட அடிக்கல் நாட்டு விழா (04-07-2026)













# முதற்சங்க கட்டட அடிக்கல் நாட்டு விழா (04-07-2026)











# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# சுந்தரமூர்த்திநாயனார் வழி நிற்போம்!

**"பித்தா! பிறைசூடி! பெருமானே! அருளாளா!"** என்று உரிமையோடும் உவகையோடும் இறைவனை அழைத்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், பத்தியின் உணர்வோடு வரலாற்றுணர்வின் உயரத்தையும் தமிழுலகிற்கு உணர்த்திய அருளாளர். இறைவனிடம் தோழமையோடு உரையாடிய அவர், இறைவனின் அடியார்களை உலகம் போற்றும் வகையில் அவர்களின் பெருமையைப் பதிவு செய்த முதல் பெரும் பண்பாட்டுச் செயற்பாட்டாளராகவும் விளங்குகினார்.

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டத் தொகை தமிழரின் ஆன்மிக மரபில் ஒரு பதிகம் என்கிற நிலைக்கு அப்பாலே ஒரு பண்பாட்டு வரலாற்று ஆவண மாகவே திகழ்கிறது எனலாம். சுந்தரர் வாழ்ந்த காலத்தில் சிவனடியார்களின் புகழ் பல தலங்களில் வாய்மொழி மரபாகவும், மக்களின் நினைவுகளிலும் வாழ்ந்து வந்தது. அந்தச் சிதறியிருந்த நினைவுகளை ஒருங்கிணைத்து, அடியார்களின் பெருமையைப் பாடலாக நிலைநிறுத்தியதே சுந்தரரின் மாபெரும் தொண்டாகும். இன்று அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறு நம் நினைவில் நிலைத்திருப்பதற்கும், பின்னர் சேக்கிழார் அருளிய பெரியபுராணம் உருவாகுவதற்கும் இந்தத் திருத்தொண்டத் தொகையே அடித்தளமாக அமைந்தது.

சுந்தரர் இறைவனை விட இறைவனின் அடியார்களைப் போற்றுவதிலேயே பெருமை கண்டார். **"தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்"** என்று தொடங்கும் திருத்தொண்டர் தொகை அடியார் அன்பே உயர்ந்தது எனும் பிரகடனம் எனலாம். அடியார்களின் திருவடிகளை வணங்குவதிலேயே சிவபத்தியின் முழுமை இருக்கிறது என்ற சைவ சிந்தனையை உலகறியச் செய்த அரிய இலக்கியச் சான்று அது.

ஒரு சமூகத்தின் உயர்வு அதன் பொருளாதார வளத்தில் மட்டுமல்ல, அதன் வரலாற்றுப் பேணுகையிலும் அமைகிறது. தமது வரலாற்றைப் பாதுகாக்கும் இனம் மட்டுமே எதிர்காலத்தை உறுதியாகக் கட்டியெழுப்பும். இதனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்த சுந்தரர், தமது சொந்த ஆன்மிக அனுபவங்களை மட்டும் பாடாமல், முன்னோர் தொண்டர்களின் பெயர்களையும் பெருமைகளையும் காலத்திற்காகப் பதிவு செய்தார். அதனால் அவர் தமிழரின் முதல் வரலாற்றுணர்வு மிக்க ஆவணப்படுத்துநர்களில் ஒருவராகவும் திகழ்கிறார் என்றால் மிகையல்ல!

இன்று நமது காலம் புதிய சவால்களை எதிர்கொள்கிறது. பழமையான கோயில்கள் அழிகின்றன. கல்வெட்டுகள் சிதைகின்றன. ஊர் வரலாறுகள் மறைகின்றன –தமிழறி ஞர்களின் அரும்பணிகள் பதிவு செய்யப்படாமல் காலத்தில் கரைகின்றன. இந்நிலையில் சுந்தரர் காட்டிய வழி நமக்குப் புதிய பொறுப்பை நினைவூட்டுகிறது. நிகழ்வுகளைப் பதிவு செய்வதும், ஆவணங்களைப் பாதுகாப்பதும், அறிஞர்களின் பணிகளை நூலாக்குவதும், நம் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறைக்கு ஒப்படைப்பதும் ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

இன்று பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு மையங்களிலும் சைவ இலக்கியம், கல்வெட்டியல், வரலாற்றியல், சமூகவியல் ஆகிய துறைகளில் நடைபெறும் எண்ணற்ற ஆய்வுகளுக்கு திருத்தொண்டத் தொகை இன்னமும் முதன்மை ஆதாரமாக விளங்குகிறது. சுந்தரரின் ஒரு பத்திப் பாடல் நூற்றாண்டுகளைக் கடந்து அறிவியல் ஆய்வுகளுக்கே வழிகாட்டுகிறது என்றால், ஆவணப்படுத்தலின் வலிமை எத்தகையது என்பதை அதுவே எடுத்துரைக்கிறது.

எனவே, **"சுந்தரர் வழி நிற்போம்"** என்பது பத்திக்கான அழைப்பாக மட்டுமல்லாது அது வரலாற்றைப் பாதுகாக்கும் உறுதிமொழியாகவும் ஒலிக்க வேண்டும். நம் மரபை அறிந்துகொள்வோம் நம் முன்னோர்களின் தொண்டுகளை ஆவணப்படுத்துவோம்! நம் காலத்தின் வரலாற்றை வருங்காலத்திற்காகப் பாதுகாப்போம். அதுவே சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையில் அந்த அருளாளருக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதையாகும். தமிழின் நினைவகத்தை வளப்படுத்தும் ஒவ்வொரு செயலும், சுந்தரரின் திருத்தொண்டின் தொடர்ச்சியே என்பதை மறவாதிருப்போமாக!

திருச்சிற்றம்பலம்

# சிவபுராண விளக்க உரை



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**49."நிறங்களோர் ஐந்து உடையாய்!"**

ஐந்தும் என்று முற்றும்மை தொகுத்தல் ஆயிற்று. **"நினைவார் நினைவின் வண்ணம் எந் நிறத்துடனும் தோன்றுவாய்".**

**இதன் பொருள்:-**

அன்பர்களின் ஆழ்ந்த நினைவுகளிலும், தியானத்திலும், இறைவன் அவர்கள் விரும்பும் வடிவில், நிறத்தில், உணர்வில் காட்சி தருவார். என்பது அருணை வடிவேல் முதலியார் உரை.

சிவபெருமானது ஐந்து முகமாகிய சத்யோ சாதம் வெண்மை நிறத்தையும்,

**வாமதேவம் சிவப்பு நிறத்தையும்,**
**அகோரம் கருமை நிறத்தையும்,**
**தற்புருடம் பொன் நிறத்தையும்,**
**ஈசானம் சாம்பல் நிறத்தையும் குறிக்கிறது.**

ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு நிறமுடையது என்று சிவ ஆகமங்கள் சதாசிவமூர்த்தி தியானத்தில் கூறப்பட்டுள்ளது.

இறைவன் அட்ட மூர்த்தியாக உள்ளான்.

"இருநிலனாய் தீயாகி நீருமாகி இயமானனாய் எரியும் காற்றுமாகி அருநிலையத் திங்களாய் ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி"

என்பது அப்பர் வாக்கு.



பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி மீ.சிவசண்முகம், கோயம்பத்தூர், தமிழ்நாடு.

அட்ட மூர்த்தி என்றால் ஐந்து பூதங்களையும், சூரியன்,சந்திரன், உயிர் இவை எட்டும் சேர்ந்தது அட்ட மூர்த்தி என்று அழைக்கப்படுகிறது. ஐந்து பூதங்களுக்கும் நிறம் உண்டு. எனவே அட்ட மூர்த்தியாக உள்ள இறைவனுக்கும் ஐந்து நிறங்கள் உண்டு.

பூதங்களுக்கு நிறம் உண்டு என்று உண்மை விளக்கத்தில் மணவாசகம் கடந்தார் கூறுகிறார்.

**"பொன் பார், புனல் வெண்மை, பொங்கும் அனல் சிவப்பு,**
**வன் கால் கருமை, வளர்வான் தூமம்"**
**என்று நிலத்திற்கு பொன் நிறமும்,**
**நீருக்கு வெண்மை நிறமும்,**
**அனலுக்கு சிவப்பு நிறமும்,**
**காற்றுக்கு கருமை நிறமும்,**
**ஆகாயத்துக்கு சாம்பல் நிறம்**

என்று ஐந்து பூதங்களுக்கு நிறம் சொல்லுகிறார். எனவே இறைவனுடைய நிறமும் ஐந்து என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

திருச்சி அருகில் உள்ள உறையூர் என்ற தலத்தில்

இறைவன் பெயர் **"பஞ்சவர்ணேசுவர்"** என்பதாகும். இது ஒரு பாடல் பெற்ற தலம். இறைவன் உருவம், அருவுருவம், அருவம் தாங்கி வருகிறார். உயிர்கள் உய்வடையும் பொருட்டு உருவம் தாங்கி வருவதால் அவனுக்கு நிறம் உண்டு. யான் எனது என்ற செருக்குடன் இருவர் மெய்யை தேடியமையால் சிவபெருமான் தீப்பிழம்பாக காட்சி கொடுத்தார். அதை அருவுருவம் என்கிறார் மகாவித்துவான் தண்டபாணி தேசிகர். சிவலிங்க திருமேனியும் அருவுருவமாக கருதப்படுகிறது.

மேலும் சுத்த வித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் சுத்த தத்துவங்களில் இறைவன் விளங்குகிறார். ஐவகை வடிவம் கூறப்படுவதால் இறைவனுக்கு ஐந்து நிறம் உண்டு என்று கூறப்படுகிறது. மாணிக்கவாசகருக்கு இறைவன் உருவம் தாங்கி குருவாக வந்தார்.

**50. "விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய், எம் பெருமான்!"**

இறைவனின் மேன்மையை இந்த வரிகளில் சொல்கிறார். **"மறைந்திருந்து தாயாகிய எம்பெருமானே"** என உரைக்க. அடியார்க்கு வெளியே நிற்கும் நீ, தேவர்க்கு மறைந்து நிற்கின்றாய் என்றபடி. இது அருணை வடிவேல் முதலியார் உரை.

விண்ணோர்கள் பசு,புண்ணிய விசேடத்தால் சொர்க்காதி போகங்களையும், பெற்று பெத்த ஆன்மாக்கள் ஆகிய சகலர்களே. அவர்கள் பதவிகளில் மயங்கியவர்கள். தேவர்கள் சிவபெருமானை ஏத்துவதும் தான் வாழ்வதற்காக. அன்றி சிவஞானம் பெற்று, செம் பொருளை பெறுவதற்காக அன்று. அவர்கள் தமக்குள்ள வினை சேடத்தை உணராமல் பேராசைப் படுகின்றார்கள். ஆதலின் அவர்களுக்கு இறைவன் மறைந்து இருக்கின்றான் என்பது தண்டபாணி தேசிகர் உரை.

மறைந்திருந்தான் எனின், இறைவன் பட்ச பாதமுடையவர் என எண்ணத் தோன்றும்.

இல்லை அவன் பாரபட்சம் உடையவன் அல்லன் என்பதை அப்பரும், உமாபதிசிவமும் அழகாக அருளுகின்றனர்.

**"சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்**
**நலமிலன் நாடொறும் நல்குவான் நலம்"** என்று அப்பர் பெருமானும்,

**"நலம் இலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்**
**சலமிலன் பேர் சங்கரன்"** என்று உமாபதி சிவமும் கூறுகின்றனர்.

தேவர்கள் தாமே முதல்வர் என்று எண்ணும் அதிகார பலம் உடையவர்கள். ஆதலின் அவர்களுக்கு சிவமே பரம்பொருள் என்று விளங்காமல் போகும். ஆகவே ஆணவத்தால் விளக்க முறாத தேவர்கள் குறையை அறிவால் சிவனேயான மாணிக்க வாசக சுவாமிகள் தலைவனதாக மறைந்திருந்தாய் என கூறினார்.

"தேவார்ந்த தேவனை, தேவர் எல்லாம் திருவடி மேல் அலர் இட்டு, தேடி நின்று
நா ஆர்ந்த மறைபாடி நட்டமாடி நான்முகனும் இந்திரனும் மாலும் போற்ற கா ஆர்ந்த
பொழில் சோலைக் காணப் பேராய் கழுக்குன்றத்து உச்சியாய், கடவுளே நின்
பூவார்ந்த பொன்னடிக்கு போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே!"

தேவாதி தேவர்களெல்லாம் இறைவனின் திருவடியில் மலரிட்டு, மறைகள் பாடி, ஆடி வழிபட்டாலும் பெருமான் அவர்கள் வழிபாட்டை ஏற்பது இல்லை. ஏனென்றால் அவர்கள் சொர்க்காதி போகத்தில் இருப்பவர்கள். அவர்கள் எதற்கு வழிபடுகிறார்கள்? என்றால் எல்லாரும் தங்களை வணங்க வேண்டும் என்பதற்காக இறைவனை வழிபடுகிறார்கள் என்கிறார் மாணிக்கவாசகர்.

**"வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால், தாழ்த்துவதும், தம்மை எல்லாம் தொழ வேண்டி...."** என்பது மணிவாசகர் வாக்கு.

எனவே இறைவன் தேவர்கள் வழிபாட்டை ஏற்காமல் பூமிக்கு வந்து விட்டான் என்கிறார் மணிவாசகர்.

"வான் பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்" - 8 ௫18௫4
"விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசும் மலர் பாதம் தந்தருள வந்தருளும் தேசன்..."

இந்த வரியில் இரு கருத்துக்கள் உண்டு. ஒன்று தேவர்கள் வழிபாடு தொடர்ந்து செய்யாமல் இருப்பதால் இறைவனை பார்க்க கூசுகிறார்கள் என்பது ஒரு கருத்து.

மற்றொன்று தேவர்களின் வழிபாட்டை கண்டு பெருமான் கூசி தன் கால்களை எடுத்துக் கொள்கிறான் என்கிறார் மகாவித்வான் தண்டபாணி தேசிகர்.

மேலும் **"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சிலே, புக்கு நிற்கும் பொன்னார் சடை , புண்ணியன,பொக்கும் மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பவர் அவர் தம்மை நாணியே!"** என்ற திருப்பாட்டில் மனம் முழுவதும் பொய்யை உடைய பொய்மையாளர்கள் பூவும், நீரும் கொண்டு வழிபட வந்தால் அவர்களைக் கண்டு இறைவன் கூசி நிற்கிறார் என்கிறார் அப்பர் பெருமான்.

**எம்பெருமான்:- எம் தலைவன்**

**"எம் தலைவனாம் இறைவன் எல்லோருக்கும் தாம் இறைவன்"** என்பது பாம்பன் சுவாமிகளின் வாக்கு.

உருகி வழிபாடு செய்பவர்கள் அவனை தலைவன் என்று உணர்கிறார்கள். உருகி வழிபடாதவர்கள் அவனை உணர்வதில்லை. அதுபோல விண்ணோர்கள் இறைவனை உணர்ந்து வழிபாடு செய்வதில்லை. எனவே அவர்களுக்கு மறைந்து நிற்கிறான். விண்ணோர்கள் ஏத்த, இறைவன் மறைந்துள்ளான் என்பதையே,

**"விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய் எம்பெருமான்"** என்கிறார் மாணிக்கவாசகர்.

**51."வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருளை,"**

**வல்வினையேன்** - நுகர்ந்தாலன்றி நீங்காத வினையை வல்வினை என்றது.

**"வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே"**என்று மணிவாசகர் தன் வினைக்கு இறுதி இல்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்று கூறுகிறார்.

வலிய வினை நீங்க விநாயகர் பெருமானை வழிபாடு செய்ய வேண்டும் என்று உமாபதி சிவாச்சாரியார் கூறுகிறார்.

**"ஒளியான திருமேனி உமிழ் தானம் மிகமேவு**
**களியார வரும் ஆனை கழல் நாளும் மறவாமல்**
**அளி ஆளும் மலர் தூவும் அடியார்கள் உளமான**
**வெளியாகும் வழிதாய வினை கூட நினையாவே."**
என்கிறார்.

மேலும் மணிவாசகர் சிவன் குருநாதராக வந்து உபதேசம் செய்த பின் தொடர்ந்து பெருமானை தக்க வைத்துக் கொள்ளாததால் அது என் வல்வினை என்கிறார். மதுரையின் மந்திரியாகிய நான், 16 வயதில் வேதங்கள் ஆகமங்கள் கற்ற நான், என்று சொல்லாமல் "வல்வினையேன்" என்று தன்னைச் சொன்னது அவர் பணிவு மொழியைக் காட்டுகிறது.

மறைந்திட மூடிய இருள்– ஆன்மாவின் ஞான வியாபகம் மறைய, போர்த்துள்ள ஆணவம். **"இருளைநீக்கி அருள"** என ஒரு சொல் வருவித்து பொருள் காண்க.

உலக இருள் தன்னைக் காட்டி பொருளைக் காட்டாது. ஆணவத்தின் காரியமாகிய அறியாமை இருள், தன்னையும் காட்டாது, தலைவனையும் காட்டாது, பொருள்களையும் புலப்படுத்தாது. ஆதலின் உலக இருளை விட இது உயர்ந்தது, வேறானது என்பர். எனவே **"மாய இருள்"** என்றார்.இது மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் உரை.

இதைத்தான் உமாபதி சிவாச்சாரியாரும், **"ஒரு பொருளும் காட்டாத இருள் உருவம் காட்டும் இரு பொருளும் காட்டாது இது"** என்கிறார்.

(தொடரும்)

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்



**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

### ஒற்றியூர் இறைவரிடம் வன்தொண்டர் வைத்த அதிசய விண்ணப்பம்

ஒற்றியூர் இறைவர் சங்கிலியாரின் கனவில், **"சுந்தரன் உனைப் பிரியேன் என்று வாக்களிப்பான்"** என்றருள் புரிந்த பின்னர் வன்தொண்டரின்பால் எழுந்தருளிச் சென்று, **"சங்கிலியுடன் மணநிகழ்வு நடந்தேற அவள் மனதிலுள்ள குறையொன்றினை நீ தீர்க்க வேண்டும்"** என்றருளிச் செய்கின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு விவரிக்கின்றார்:

**வேயனைய தோளியார் பால்நின்று மீண்டருளித்
தூயமனம் மகிழ்ந்திருந்த தோழனார் பால்அணைந்து
நீஅவளை மணம்புணரும் நிலைஉரைத்தோம் அதற்கவள்பால்
ஆயதொரு குறைஉன்னால் அமைப்பதுள(து) என்றருள
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 244)**

நம்பிகள் எம்பெருமானின் திருவடிகளை மகிழ்வுடன் பணிந்து அச்செயல் யாதென வினவ, மதிசூடும் முதல்வரும், **"சங்கிலியைப் பிரியேன் என்றொரு சபதத்தினை நீ இவ்விரவுப் பொழுது முடியுமுன்னர் அவளுக்குச் செய்து தருவாயாக"** என்றருளுகின்றார்.

**வன்தொண்டர் மனம்களித்து வணங்கி அடியேன் செய்ய
நின்றகுறை யாதென்ன நீஅவளை மணம்புணர்தற்(கு)
ஒன்றியுடனே நிகழ ஒருசபதம் அவள்முன்பு
சென்றுகிடைத்(து) இவ்விரவே செய்கஎன அருள்செய்தார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 245)**

முக்கண் முதல்வரின் திருத்தலங்கள் தோறும் சென்று பரவுவதையே நியமமாகக் கொண்டுள்ள தம்மால், ஒரே தலத்தில் தங்கியிருப்பது சாத்தியமில்லை என்பதை உணர்ந்த வன்தொண்டர், இறைவனிடம் ஓர் அரிய விண்ணப்பத்தை வைக்கின்றார்.

**வம்பணிமென் முலையவர்க்கு மனங்கொடுத்த வன்தொண்டர்
நம்பர்இவர் பிறபதியும் நயந்தகோலம் சென்று
கும்பிடவே கடவேனுக்(கு) இதுவிலக்காம் எனும்குறிப்பால்
தம்பெருமான் திருமுன்பு தாம்வேண்டும் குறையிரப்பார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 247)**

தமிழ்வேந்தரான சுந்தரனார் தோழமை உரிமையோடு, "எந்தை பெருமானே! சங்கிலியுடன் அடியவன் உன் திருச்சன்னிதிக்குச் சபதம் புரிய வருகையில், நீர் அச்சிவலிங்கத் திருமேனியினின்றும் நீங்கி, ஆலய வளாகத்திலுள்ள மகிழ மரத்தின் கீழ் எழுந்தருளி இருக்க வேண்டும்" என்று இறைஞ்சுகின்றார். கருவறையில் இறைவன் இல்லையெனில், அங்கு செய்யும் சபதம் செல்லுபடியாகாது என்ற எண்ணத்திலேயே சுந்தரர் இங்ஙனம் வேண்டுகின்றார்.

**சங்கரர்தாள் பணிந்திருந்து தமிழ்வேந்தர் மொழிகின்றார்
மங்கைஅவள் தனைப்பிரியா வகைசபதம் செய்வதனுக்(கு)
அங்கவளோ(டு) யான்வந்தால் அப்பொழுது கோயில்விடத்
தங்குமிடம் திருமகிழ்க்கீழ்க் கொளவேண்டும் எனத் தாழ்ந்தார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 248)**

அடியவர்க்கு எளியவரான ஆதி முதல்வரும், "நம்பி! நீ வேண்டிய வண்ணமே கருவறையை விட்டு நீங்கி மகிழ மரத்தடியில் தங்குகின்றோம்" என்று உடன்படுகின்றார். சுந்தரனாரும் பெருமானின் அருளை எண்ணி நெகிழ்ந்து துதிக்கின்றார்.

**தம்பிரான் தோழரவர் தாம்வேண்டிக் கொண்டருள
உம்பர் நாயகரும் அதற்குடன்பாடு செய்வாராய்
நம்பிநீ சொன்னபடி நாம்செய்தும் என்றருள
எம்பிரானே அரிய(து) இனிஎனக்கென் எனஏத்தி
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 249)**

இவ்வாறு, தன் தோழரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு இறைவன் கருவறையை விட்டு அகலச் சம்மதித்த இந்நிகழ்வு,

அடியவரின் பத்திக்கும் இறைவனின் எளிமைக்கும் சான்றாக விளங்கும் ஒப்பற்ற பத்தியின் மாட்சியாகும்.

### சங்கிலியாருக்கு மகிழுமர இரகசியத்தை உணர்த்திய ஒற்றியூர் இறைவர்

சுந்தரர் ஒற்றியூர் இறைவரிடம், "சங்கிலியுடன் திருச்சன்னிதிக்கு வாக்களிக்க வரும் வேளையில், ஐயனே! நீர் அச்சிவலிங்க மூர்த்தத்தினின்றும் நீங்கி மகிழ மரத்தடியில் எழுந்தருளி இருக்க வேண்டும்" என்று வேண்ட, சிவமூர்த்தியும் அதற்கு உடன்படுகின்றார். பின்னர் ஆதிபுரீஸ்வரப் பரம்பொருள் மீண்டும் சங்கிலியாரின் கனவினில் எழுந்தருளுகின்றார். தோழரான சுந்தரருடன் திருவிளையாடல் புரிய மகிழ்ந்தோ அல்லது சங்கிலியாரின் வழித்தொண்டுச் சிறப்பினை நினைந்தோ பெருமான் மீண்டும் அணைந்தார் எனச் சேக்கிழார் பெருமான் வியந்து பாடுகின்றார்:

அஞ்சலி சென்னியில் மன்ன அருள்பெற்றுப் புறம்போதச்
செஞ்சடையார் அவர்மாட்டுத் திருவிளையாட்டினை மகிழ்ந்தோ
வஞ்சியிடைச் சங்கிலியார் வழியடிமைப் பெருமையோ
துஞ்சிருள் மீளவும்அணைந்தார் அவர்க்குறுதி சொல்லுவார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 250)

வேத முதல்வரான எம்பெருமான் சங்கிலியாரிடம், "நங்கை! உனக்காக ஆரூரன் சன்னிதி முன் சபதம் செய்ய வரும்போது அதற்குச் சம்மதியாமல், பூக்கள் மலரும் மகிழ மரத்தின் கீழ் அச்சபதத்தைப் பெற்றுக்கொள்வாயாக" என்று இரகசியக் குறிப்பினை உணர்த்தியருளுகின்றார்.

சங்கிலியார் தம்மருங்கு முன்புபோல் சார்ந்தருளி
நங்கை உனக்காரூரன் நயந்து சூளுறக் கடவன்
அங்கு நமக்கெதிர் செய்யும் அதற்குநீ இசையாதே
கொங்கலர்பூ மகிழின்கீழ்க் கொள்கஎனக் குறித்தருள
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 251)

சங்கிலியார் அகம்குழைந்து கண்ணருவி பாய, **"மாலயனும் அறிதற்கரிய எந்தை பெருமானே! இந்த இரகசியத்தை எனக்கு அருளிச்செய்தமையால் உமது அடியவள் எனும் பேற்றைப் பெற்று உய்ந்தேன்"** என்று இறைவனின் திருவடிகளில் வீழ்ந்து தொழுகின்றார்.

மற்றவரும் கைகுவித்து மாலயனுக்(கு) அறிவரியீர்
அற்றம் எனக்கருள் புரிந்த அதனில் அடியேனாகப்
பெற்ற(து) யான் எனக்கண்கள் பெருந்தாரை பொழிந்திழிய
வெற்றிமழ விடையார்தம் சேவடிக்கீழ் வீழ்ந்தெழுந்தார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 252)




பின்னர் விழித்தெழுந்த சங்கிலியார், இறைவரின் அருட்செயலை நினைந்து அதிசயமுற்று மீண்டும் உறங்காதவராய், அருகில் துயிலும் தோழியரைத் துயிலெழுப்புன்றார்.

தையலார் தமக்கருளிச் சடாமகுடர் எழுந்தருள
எய்தியபோ(து) அதிசயத்தால் உணர்ந்தெழுந்(த) அவ்விரவின்கண்
செய்யசடையார் அருளின் திறம்நினைந்தே கண்துயிலார்
ஐயமுடன் அருகுதுயில் சேடியரை அணைந்தெழுப்பி
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 253)

இறைவர் கனவில் உணர்த்திய யாவற்றையும் தோழியரிடம் சங்கிலியார் கூற, அவர்களோ **"ஆதிப் பரம்பொருள் ஒருமுறைக்கு இருமுறை கனவில் எழுந்தருள இவர்பெற்ற தவம்தான் என்னே!"** என்று அச்சமும், மகிழ்ச்சியும், அதிசயமும் ஒருசேர எய்திச் சங்கிலியாரைப் பணிகின்றனர்.

நீங்குதுயில் பாங்கியர்க்கு நீங்கல் எழுத்தறியுமவர்
தாம்கனவில் எழுந்தருளித் தமக்கருளிச் செய்ததெலாம்
பாங்கறிய மொழியஅவர் பயத்தினுடன் அதிசயமும்
தாங்கு மகிழ்ச்சியும் எய்தச் சங்கிலியார் தமைப் பணிந்தார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 254)

இவ்வாறு, தன் அடியவர்களிடையே நிலவும் எல்லை யற்ற பத்தியையும் அன்பையும் மேலும் சிறப்பிக்க, இறைவன் நிகழ்த்திய இந்த மகிழமரத் திருவிளையாடல் பெரியபுராணத்தில் மிக அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## ஆறுமுக நாவலர் போற்றிய முத்தி நல்கும் அராலி வண்ணப்புரம் விசுவநாதேசுவரர் திருக்கோயில்



### திருத்தல அமைவிடம்

சைவப்பூமியான ஈழமண்ணின் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குக் கரையோரமாக அமைந்திருக்கும் ஒரு முக்கோண வடிவக் கிராமமே அராலி ஆகும். பழமைக் காலம் தொட்டு இக் கிராமம் சைவத்தமிழ்ப் பண்பாட்டையும் கிராமியப் பண்பாட்டையும் நன்னிலையில் பேணிவருவதனால் இங்கு பத்துக்கும் மேற்பட்ட கோயில்கள் கிராமத்தின் நான்கு திசைகள் தோறும் காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டு சிவன் கோயில்களும் அடங்குகின்றன. அதிலொன்று வண்ணப்புரத்தில் அமைந்துள்ள சிவன் கோயிலாகும்.

### மூர்த்தியின் சிறப்பு

இச் சிவன் கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புக்களும் பொருந்தியது. விசாலாட்சி அம்மன் உடனுறை விசுவநாதேசுவரர் இறைவி இறைவனாக எழுந்தருளி அருளாட்சி புரிந்து வருகின்றனர். தெற்குப்புறமுள்ள தீர்த்தக் கேணி அற்புத சத்தி பொருந்திய தீர்த்தவாரியாகும். ஆனி உத்தரம் அன்று இக் கேணியில் தீர்த்தத் திருவிழா வருடம் தோறும் நடைபெற்று வருகின்றன. மிகப் பழங்காலத்தில் இக் கோயில் வண்ணாம்புலம் சிவன் கோயில், கொட்டைக்காடு சிவன்கோயில், அராலி சிவன் கோயில் என்று பழைய உறுதிச் சாசனங்கள் குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. தற்போது அராலி வண்ணபுரம் விசாலாட்சி அம்மன் உடனுறை விசுவநாதேசுவரர் திருக்கோயில் என்று வழங்கப்பட்டு வருகின்றது.

### திருத்தல தலவரலாறு




சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

இக் கோயிலின் வரலாறு பற்றி, யாழ் வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு அறக்கொடைச் சொத்தாக வழங்கப்பட்ட நில உறுதிச்சாசனத்தில் சிற்சில குறிப்புக்களாக எழுதப்பட்டுள்ளது. ஒருமுறை யாழ் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த வைத்தியலிங்கச் செட்டியாரும், சிவசீர் நா. விஸ்வநாதசாஸ்திரிகளும், காசிக்குச் சென்று இரு சிவலிங்கங்களை யாழ்ப்பாணம் கொண்டு வந்தனர். அவற்றில் செட்டியாரின் விருப்புக்கமைய சாஸ்திரிகள் சிறிய சிவலிங்கத்தை எடுத்தார். மீதி இருந்த சிவலிங்கம் பெரியதாக இருந்தது. அதைச் செட்டியார் எடுத்துக் கொண்டார். ஆனால் இரு சிவலிங்கங்களையும் நிறுத்து அளவை செய்யும் போது சிறிய சிவலிங்கமே எடையில் அதிகமாக இருந்தது. அச்சிவலிங்கம் வழிபடுவோருக்கு செல்வத்தைக் கொடுப்பதால் அது கனமாக இருந்தது என்றும், மற்றையது வழிபடுவோருக்கு முத்தியைக் கொடுப்பதனால் அதன் கனதி குறைவாக இருந்தது என்றும் கூறி செட்டியார் எடுத்துச் சென்ற சிறிய சிவலிங்கத்தை அராலி வண்ணப்புரத்திலும், சாஸ்திரிகள் எடுத்த பெரிய சிவலிங்கத்தை வண்ணார்பண்ணையிலும் ஒரே நேரத்தில் நிலைநிறுத்தி கிரியை வழிபாடு இயற்றினார் என்று வண்ணார்பண்ணை சிவன் கோயில் ஆவணம் குறிப்பிடுகின்றது.

இவ் ஆலயம் பல ஆண்டுகளுக்கு முன்பு அராலியூரைச் சேர்ந்த அமரர் சந்திரசேகர ஐயர், அவ்வூரைச்சேர்ந்த பரமர் விநாயகரிடத்தில் 1713-10-08 ஆம் திகதி அறுதி வாங்கிய





ஓலைக் குறிப்புப்படி வண்ணாம்புக் காணியிலும், குறித்த ஐயரின் சகோதரர்களாலும் அப்பரம்பரையினராலும் வாங்கி விடப்பட்ட காணியிலும் அதே போல் சிதம்பர உடையார் என்பவராலும் அவர் சந்ததியினர் வாங்கி விட்ட காணியிலும், குறித்த ஐயரின் பேரனான விஸ்வநாதசாஸ்திரி அவர்களால் 1796-04-05 ஆம் திகதி அத்திபாரம் இடம்பெற்று ஊர்ப் பொது அறநிதியில் கோயில் எழுப்பி, காசியில் இருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கத்தை 1843-06-24 ஆம் திகதி நிலை நிறுத்தும் குடமுழுக்குக் கிரியை இடம்பெற்று, விசுவநாதசுவாமி கோயில் என்று பெயர் சூட்டி வழங்கி வந்ததாகக் கூறப்படுகின்றது.

### பூசை மரபும் திருவிழாவும்

தற்போது இவ்வாலயம் மிகச்சிறப்பான பேரமைப்புடன் விளங்குகின்றது. மூலவர் அமர்ந்துள்ள கருவறை மிகவும் பழமையானது. சோழர் கலைப்பாணியைத் தழுவி அமைக் கப்பட்டுள்ளது. விசாலாட்சி அம்மனுக்கும் தனிக்கோயில் அமைந்துள்ளது. கோயிலின் முக மண்டபத்தில் ஆறுமுக நாவலர் அம்மை மீது பாடிய பதிகம் சுவரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவை தவிர விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், சதாசிவன், சனீசுவரன், சண்டேசுவரர், தென்முகக் கடவுள் (தட்சணாமூர்த்தி), சந்தானகோபாலர் ஆகியோருக்கும் தனித்தனிக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் தினசரி மூன்று வேளை நித்தியப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. மற்றும் சிவனிரவு, கழுவாய் விரதம், திருவாதிரை, ஒன்பானிரவு (நவராத்திரி), நடராசர் திருமஞ்சனங்கள், சிறப்பு மிகுந்த நைமித்திய பூசைகளாக நடைபெற்று வருகின்றன. இக் கோயிலின் திருவிழா ஆனி உத்தரத்தை தீர்த்தவாரியாகக் கொண்டு பத்து நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்றும் வருகின்றன. கோயில் ஆரம்பித்த காலம் முதல் விஸ்வநாத சாஸ்திரிகளின் வம்சாவளி மரபினர்களே இக் கோயிலில் பூசகர்களாகத் தொண்டாற்றி வருகின்றனர்.

### கந்தபுராண மடம்

நல்லைநகர் சீர்வளர்சீர் ஆறுமுக நாவலர் அவர்களால் பேணி வளர்க்கப்பட்ட கந்தபுராணபடன மரபு இவ் ஆலயத்திலும் செழித்தோங்கியது. இற்றைக்கு 200 வருடங்களுக்கு மேலாக விசாலாட்சி அம்மன் கோயில் வாசலுக்கு அப்பால் கந்தபுராணபடனம் செய்வதற்கென்று “கந்தபுராணமடம்” ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம் மடம் இக்கோயில் நிறுவப்படுவதற்கு முன்பே அமைக்கப்பட்ட புராணமண்டபம் என்றே குறிப்பிடுவர். இம் மடத்தில் கோயிலின் நிறுவுனர் விஸ்வநாத சாஸ்திரிகள் சிவபூசை, கந்தபுராணப் புத்தகப் பூசையும் செய்து புராணபடனம் செய்தார் என்றும் இதற்காக ஊர் பொது சனங்கள் அதைக் கேட்டு வந்தனர் என்றும் அக்காலத்தில் இம் மடமே பொதுமக்களுக்கு சமய அறிவூட்டின என்றும், அவ்வாறு புராணபடனம் கேட்டுப் பயனடைந்த சிதம்பர உடையார் என்பவர் இவ் ஆலயத்திற்கு நிலதானம் அளித்தார் என்றும் கூறப்படுகின்றது.

### கோயில் இலக்கியம்

இக் கோயில் மீது விஸ்வநாத சாஸ்திரிகள் வண்ணப்புரத்தின் மீது நூறு பாடல்கள் கொண்ட அந்தாதி பாடியுள்ளார். மேலும் அவரால் விசுவநாதசுவாமி மீது ஊஞ்சல் பதிகமும் பாடப்பட்டது. நல்லை நகர் ஆறுமுகநாவலரும் 1856ஆம் ஆண்டு இக் கோயிலுக்கு வருகை தந்து விக்னேசுவரப் பெருமான் மீது விருத்தப்பாமாலை சூட்டி வணங்கியதோடு விசுவநாதசுவாமி மீதும் விசாலாட்சி அம்மை மீதும் விருத்தப்பாமாலை சூடினார் என்றும் கூறப்படுகின்றது.

**“உலகெலா மாகிவே றயுடனு மாய்நின்ற**
**உண்மையறி வின்ப வடிவே**
**ஓங்குமீ சானாதி சத்திபஞ் சகமேமெய்**
**யுருவெனக் கொண்ட முதலே**
**அலகிலா முற்றறிவு முதலறு குணங்களா**
**றங்கமென வுடைய பரனே**
**அவனிமுதன் மூர்த்தமெட் டுடையனாய்ச்**
**சர்வாதி யட்டநா மங்கொள் சிவனே**
**இலகுசீ ரைந்தொழி லுஞற்றியு முஞற்றிலா**
**தினிதுதிகழ் கின்ற பதியே**
**எண்ணத் தெவிட்டாத தெள்ளமுத**
**மேயடிய ரிடர்போக்கு சேம நிதியே**
**விலகலா உன்னவழி பாடுசெயு மண்டர்க்கு**
**வேண்டுவ கொடுத்த ருளுவாய்**
**விண்டல மளாவிவளர் தண்டலை யராலிநகர்**
**விசுவநா தக்கட வுளே.” - (விசுவநாதர் விருத்தமாலை)**

### திருச்சிற்றம்பலம்

# ஈழத்துச் சித்தர்கள்

# கடையிற் சுவாமிகளும் சீடர்களும்



சித்த வைத்தியர்
கணேஸ் கபிலன்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

(சென்ற திங்கள் தொடர்ச்சி)

**(21) கந்தசாமி உபாத்தியாயர்-** இந்தக் கந்தசாமி என்பவர் மண்டைதீவைச் சேர்ந்தவர். தம் குழந்தைப்பருவத்திலே நாலு ஐந்து வயதாகியும் எழுந்து நடக்க முடியாது சப்பாணியாயிருந்தார். கடையிற் சுவாமிகள் ஒருநாள் அவர் வீட்டுப் பக்கமாகப் போகும்போது முற்றத்திலிருந்த குழந்தையாகிய அவரைக் கையிற் பிடித்து 'எழும்படா எழும்பி நட' என்று சொல்லித் தூக்கிவிட்டார். அவ்வளவில் சூம்பலாயிருந்த அவரது கால்கள் வலுப்பெற்று அவர் எழுந்து நடக்கத் தொடங்கிப் படிப்பிலும் விவேகியாய் வளர்ந்து வந்தார்.

**(22) இணுவில் அம்பிகைபாகர்** - இணுவிலில் வாழ்ந்த புலவர். தணிகைப்புராணத்திற்கு பொருள் எழுதும் முயற்சியில் ஈடுபட்ட போது ஒருபகுதியிற் சில பாடல்களுக்கு உரைகாண்பதில் அவருக்குச் சிக்கல் உண்டாயிற்று. ஒருநாள் அதுபற்றிய சிந்தனையோடு அம்பிகைபாகர் பெரியகடை நோக்கிப் பெருந்தெருவழியே போய்க்கொண்டிருந்தார். வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் வாசலையடைந்ததும் அப்படியே நின்றுவிட்டார். தம் காதுகளையே அவரால் நம்ப முடியவில்லை திரும்பிப் பார்த்தார். ஒரு மக்கட்கூட்டத்தின் நடுவே சுவாமிகள் பாடிக்கொண்டிருக்கக் கண்டார்.

அம்பிகைபாகருக்கு எந்தெந்தப்பாடல்கள் விளங்காதிருந்தனவோ அந்தந்தப் பாடல்களை ஒவ்வொன்றாகப் படித்துப் பொருள் விளக்கிக்கொண்டிருந்தார்கள் சுவாமிகள். இந்நிகழ்வை பண்டிதர் மு. கந்தையா அவர்களே நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**(23) இளையவியாரும் கதிரேசனாரும்** - கதிரேசனார் நயினாதீவு இல்லறஞானி இராமச்சந்திரனாரின் தந்தை. இவரின் குரு இளையவியார். இருவரும் கடையிற் சுவாமிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என்பதனை பின்வரும் குறிப்புகள் விளக்குகின்றன. இலங்கையில் ஒரு இல்லறஞானி என்ற நூலில் நா. முத்தையா கூறுகின்றார்.



கதிரேசு கடையில் சாமியாரின் பத்தன். அதனால் கடையில் சாமியாரைப்போல் தானும் குடிவகை பயன்படுத்தி மாமிசமும் சாப்பிடப் பழகிக் கொண்டார். வள்ளியம்மை பிறவிச் சைவம் என்றாலும் கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் அவர் தவறியது இல்லை. வள்ளியம்மை தெய்வீக நிலையில் உயர்ந்து நின்றார். இதனால் கதிரேசு தன் மனைவியார்மீது தனி ஒரு அன்பும் அபிமானமும் வைத்திருந்தார்.

கடையிற் சுவாமிகளின் தொடர்பினாற்போலும் கதிரேசுவிடம் சாதிவித்தியாசம் பாராட்டுவது கிடையாது. சமரச சன்மார்க்கியாக வாழ்ந்து வந்தார். தந்தையிடமிருந்து வந்த அந்த முதுசொம்தான் இன்றும் திரு. இராமச்சந்திரா அவர்களிடம் விளங்குவதைக் காண்கிறோம். மேலும் தந்தையார் வாழ்ந்த காலம் கடையிற் சுவாமிகளும் அவரது உத்தம சீடரான குழந்தைவேற் சுவாமிகளும் யாழ்ப்பாணம் குடாநாட்டில்

முக்கியமாக மண்டைதீவு, வேலணை முதலிய இடங்களில் குருபூசைகள் செய்து சாதாரண மக்களிடையே கடவுள் பத்தியை வளர்த்த காலம்.

இராமச்சந்திரனாரின் தந்தையாரும் அவருக்கு ஆன்மீகத் துறையில் வழிகாட்டியாக இருந்த இளையவியாரும் அடிக்கடி அந்தப் பூசைகளில் பங்குபற்றியதுமுண்டு. மேலும் பெயர் குறிப்பிடப்படாத ஏராளமான அன்பர்கள் சுவாமிகளின் அனுக்கிரகங்கள் பெற்றவர்களாக இருக்கலாம். சுவாமி செய்த அற்புதங்களில் அவை அடக்கப்படலாம்.

**(24) சுவாமிகளால் பொன்னாடை போர்க்கப்பட்டவர்** - பெரியகடைப் பகுதியில் முன்னர் பெரிய புடைவைக்காரன் ஒருவர் தீபாவளி தினத்தில் சுவாமிகளை மறித்து அவருக்கு பட்டாடை போர்த்தி, மேனியில் சந்தனம் பூசி, மலர்மாலை அணிவித்து மகிழ்ந்து வணங்கினார். சுவாமிகளும் அவ்வழிபாட்டை ஏற்பது போல நடித்தார். (இப்படி பல செல்வந்த வணிகர்கள் செய்வதுண்டு. அனைவரின் உபசரிப்பையும் சுவாமி ஏற்பதில்லை). அந்நேரத்தில் அவ்வழியே ஒதுக்கப்பட்டவனாக கருதப்படும் ஒருவர் சென்றார். சுவாமிகள் அவரை தம்மருகே வரும்படி கையசைத்தார். அப்போது அஞ்சியொதுங்கி தயங்கி நின்ற அம்மனிதருக்கு சுவாமி தம் தோளிற் கிடந்த பட்டாடையை கழற்றி அவர் தோளில் போட்டு "முற்பிறப்பிலே நேபாள இராசா நீ போ" என்று கூறி தம் வழியே சென்றாராம்.

**(25) சுவாமி மீனவ அன்பர் கடலில் தந்தளிக்கும் போது உதவியமை** - சுவாமி மண்டைதீவில் இருந்த காலத்தில், மீனவரிடையேயும் அவரை வணங்கும் அடியார்கள் இருந்தார்கள். ஒருசமயம் சுவாமிகள் கரையூர்ப்பகுதியால் நடந்துபோன போது ஒரு கொட்டிலில் அழுகுரல் கேட்டது. அவ்வீட்டின் தலைவன் மீன்பிடிக்கப் போனபோது, காற்றுப் பிசகால் கடலில் அலைந்து வழிதப்பி வீட்டுக்கு மீளவில்லை. அதனால் அவன் மனைவி மனமுடைந்து அழுததை அறிந்த சுவாமிகள் வீட்டினுள் புகுந்து வளையிற் சொருகியிருந்த பனைமட்டையை எடுத்து நடு வீட்டில் நின்று கூத்தாடி "ஏலையா ஏலவேலோ "என்று வள்ளம் வலிப்பதுபோல் செய்தார்கள்.

அங்ஙனம் கூத்தாடிய பின் மட்டையை எறிந்துவிட்டு அப்பாற் சென்றார்கள். அவ்வேளை மீனவன் வீட்டுக்கு மீண்டு அங்கே நிலமெல்லாம் கிளறப்பட்டிருந்ததைக் கண்டு "இது என்ன?" என்று கேட்டான். அதற்கு மனைவி "இது உன்னுடைய பைத்தியம் கூத்தாடியது' என்று கூறினாள். அதைக்கேட்ட மீனவன் உள்ளம் பூரித்து "என்னப்பன் அங்கே வள்ளம் வலித்தமாதிரி இருந்தது இங்கேயும் இப்படியா?" என்று கண்ணீர் ததும்பினான்.

**26) கை வழங்காத பெண்மணியின் கையை தன் உச்சிட்டம் மூலம் குணப்படுத்தியமை.**

திருநெல்வேலியில் ஒரு பெண்மணிக்கு ஒரு கை நோயுற்று வழங்கா நிலையிலிருந்தது. எந்தப் பரிகாரத்தினாலும் அது தீரவில்லை. கடையிற் சுவாமிகளின் அருளாலாவது இது மாறாதா என்பது அப்பெண்மணியின் ஏக்கம். நல்ல வேளையாக ஒரு வெள்ளிக்கிழமை அவர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குப் போயிருந்தார் வழிபாடு முடிந்து வாசலில் நின்றுகொண்டிருந்தார். யாரோ ஒருவர் கோயிலின் வாசலை நோக்கி ஓடி வரக் கண்டார். அங்கு நின்ற மற்றவர்கள் கடையிற் சாமீ! கடையிற் சாமீ!! என்றனர் கேட்டுப் பரபரப்புடனே அப்பெண்மணியும் சுவாமிகள் பின்னே ஓடினார். சுவாமிகள் கோயில் உள்வீதி சுற்றியோடி மறுபடியும் வாசலில் வரும்போது கோயில் ஐயர் பூத்தட்டத்துடன் அங்கு நின்றார்.

சுவாமிகள் ஐயரிடம் திடீரென்று கையை நீட்டவே ஐயர் தட்டத்திலிருந்த செவ்வரத்தம்பூக்களிற் சிலவற்றை அள்ளிச் சுவாமிகள் கையிலிட்டார். சுவாமிகள் அவ்வளவையும் தம் வாயிலிட்டுக் குதப்பிக் கொண்டோடவே அப்பெண்மணியும் தொடர்ந்தோடிக் கொண்டிருந்தார். சுவாமிகள் கோயிற் புற வீதியில் ஓரிடத்தில் திரும்பி நின்று கை நீட்டும்படி பெண்மணிக்குச் சைகைகாட்ட அவரும் அவ்வாறே கைநீட்டிப் பரிந்து நின்றனர். சுவாமிகள் திருவாய் திறந்து நன்கு மெல்லப்பட்ட செவ்வரத்தம்பூக் குதப்பலை உமிழ்ந்துவிடவே 'தனம் பெரிதும் பெற்று வந்த வறியவன்போல' மகிழ்ச்சியில் மலர்ந்துநின்றார். சுவாமிகள் பின்பு நிற்கவில்லை, ஓடிவிட்டார்.

அம்மை யார் அதனைத் தங்கையிற்றடவிய மாத்திரத்தே கை நோயும் தீர்ந்து மெய்நெறிக்கும் அருகதை உடையவராயினார். சீவன்முத்தர்களின் உச்சிட்டம் அருள் அமிழ்தம். அதுவே மருந்து. தீராநோய் தீர்த்தருள வல்லது. மெய்யடியார் அதனைப் பெறத் தவங்கிடப்பார்கள்.

சுவாமியின் அருளால் குழந்தை வரம் பெற்ற பெண், மண்டைதீவு கார்த்திகேயர் என ஏராளமானவர்கள் சுவாமிகளுக்கு அன்பர்களாகவும் அடியவர்களாகவும் இருந்துள்ளனர்.

(தொடரும்)


திருச்சிற்றம்பலம்

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர்

# திருநாவுக்கரச நாயனார்



சிவத்திருமதி.
நவிசா சுஜிந்தன்
ஆய்வு மாணவர்,
முதுதத்துவமாணி



பல்லவர் காலத்திலே சமண சமயம் உயர்ந்தோங்கி சைவ சமயம் தளர்வுற்றிருந்த காலப்பகுதியிலே, சமணசமயத்தினுடைய பிடியிலே சைவசமயம்நலிவுற்றிருந்த காலப்பகுதியிலே சமண சமயத்தை தளர்வுறச் செய்து சைவ சமயத்தை உயர்வடையச் செய்வதற்காக, சமணசமயத்தினுடைய பிடியிலே இருந்த சைவசமயத்தை மீட்டெடுத்து உயிர்ப்பிப்பதற்காக எழுந்த புண்ணிய மூர்த்தியாகக் கருதப்படுபவர் திருநாவுக்கரசர் எனப்படும் அப்பர் சுவாமிகள். இவர் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரில் வேளாண்மைக் குடியிலே மனையறமாகிய விருந்தோம்பல் என்னும் வேள்வியில் சிறந்த புகழனார் மாதினியார் ஆகியோர்க்கு மகனாகப் பிறந்தார். மருணீக்கியார் இவரின் இயற்பெயர். இவருக்கு வாகீசர், மருணீக்கியார், தருமசேனர், உழவாரப்படையாளி, திருத்தாண்டக வேந்தர், அப்பர் எனப் பெயர்கள் இருந்தாலும் திருநாவுக்கரசு எனும் திருப்பெயரே முழுமுதற் கடவுளான சிவபெருமானால் அளிக்கப்பெற்ற பெரும் சிறப்புடையது. இச்சிறப்பை சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில்,

**பாவுற்று அலர் செந்தமிழின் சொல்**
**வளப் பதிகத் தொடைபாடிய பான்மையினால்**
**நாவுக்கு அரசு என்று உலகு ஏழினும்**
**நின்நன்நாமம் நயப்புற மன்னுக**
**- (திருத்தொண்டர் புராணம் 12:21:74)**

என்ற பாடலடியினூடாக மிக அழகாக எடுத்தியம்பியுள்ளார். இவரது வாழ்வியல் முறைமையும் தேவார இலக்கியப் பனுவல்களும் இற்றைவரை தனிச்சிறப்பும் முதன்மையும் பெற்றுவிளங்குவதற்கு திலகவதியார் என்னும் பெண் ஆளுமையே அடித்தளமாய் விளங்கினார்.

தொண்டு என்பதற்கு முன்மாதிரியான ஒருவராக வாழ்ந்து, பிற சமயத்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட துன்புறுத்தல்களை இறை நினைப்பால் இன்பமாக்கி சிறந்த அனுபூதிமானாகத் திகழ்ந்தவர். சமய வாழ்வு, தனிமனித வாழ்வு, பொதுவாழ்வு மற்றும் அறவழிப்பட்ட வாழ்வு முதலானவற்றை இணைத்து நிற்கும் செம்மையான வாழ்வியலை மேற்கொண்டவர்.

**“திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட**
**திருநாவுக்கரையன்தன் அடியார்க்கும் அடியேன்”**

என்று திருத்தொண்டத் தொகையில் சுந்தரர், திருநாவுக்கரசரைப் போற்றிப் பாடியுள்ளார். திருநாவுக்கரசு சுவாமிகளின் அவதார நோக்கத்தை விளக்கும்போது, சேக்கிழார்,

**“அலகில்கலைத் துறைதழைப்ப**
**அருந்தவத்தோர் நெறிவாழ**
**உலகில்வரும் இருள்நீக்கி**
**ஒளிவிளங்கு கதிர்போல்பின்**
**மலருமருள் நீக்கியார்**
**வந்தவதா ரஞ்செய்தார்”**
**- (திருத்தொண்டர் புராணம் 12:21:18)**

என்ற பாடலடியூடாக திருநாவுக்கரசரை மக்களிடையே கலைஞானம் மிளிர வேண்டும். சிவநெறி தழைத்து அறநெறி நீங்க வேண்டும், ஒழுக்கமின்மை நீங்கி, அருந்தவத்தோர் நெறி விளங்க வேண்டும் தவ ஒழுக்கம் தழைக்க வேண்டும், மாந்தர்களின் மனதில் இருள் என்னும் அறியாமை மருள் நீங்கி, இறையருள் திகழ வேண்டும் ஆகிய நால்வகைக் காரணங்களுக்காக உலகில் அவதாரம் செய்தார் என்று

உரைக்கிறார்.

பிற்காலத்தில், மக்கள் மனதில் இருளும் மருளும் விலகச் செய்து, அருள் தழைக்கச் செய்யப் போகிறவர் என்ற காரணத்தாலோ, என்னவோ, முன்கூட்டியே, இறையருளால், அவரது பெற்றோர் மருள்நீக்கியார் என்ற இயற்பெயரை இட்டனர். இப்பெயர், காரணப் பெயர்போல அமைந்துவிட்டது.

மருள்நீக்கியாரின் தமக்கையார் திலகவதியாரை, போர்ப்படைத் தளபதியாகிய கலிப்பகையாருக்கு மணம் செய்ய நிச்சயித்தனர். இதற்கிடையே, புகழனாரும், மாதினியாரும் இறந்துபட, போரில் கலிப்பகையாரும் இறந்துவிட்டார். இவ்வாறு, இறப்புக்களினால், வாழ்க்கையில், இழப்புக்குமேல் இழப்பாக துன்புற்றனர் மருள்நீக்கியாரும், திலவதியாரும். பதினான்கு வயதே நிரம்பிய திலகவதியார், தாம் கணவராக எண்ணிய கலிப்பகையாரின் இறப்புக்குப்பின், அக்கால மரபுப்படி உடன்கட்டை ஏறி, தம் இன்னுயிரை மாய்க்கத் துணிந்தார். அந்நிலையில், மருள்நீக்கியார், தம் தமக்கையாரின் பாதங்களில் வீழ்ந்து, தமக்காக உயிர் வாழுமாறு திலகவதியாரைக் கெஞ்சி இறைஞ்சி நின்றார். தமக்கையாரும், தமது தம்பியாருக்காகத் தமது உடன்கட்டை ஏறும் முடிவை மாற்றிக்கொண்டு முன்பு கூறியபடி மருள்நீக்கியாரைச் சிறப்பாக அன்புகாட்டி வளர்த்தார்.

மருள்நீக்கியார், சமண சமயத்தைச் சார்ந்து, பல கலைகளைக் கற்று **'தருமசேனர்'** எனும் பட்டமும் பெற்றார். தம்பியார், தம்மைவிட்டுச் சமண சமயம் சாரவும், திலகவதியார் திருவாமூரை விட்டுச் சென்று, சிவபிரானது திருவதிகை வீரட்டானத்துறை சென்று, இராப்பகல் பாராது சிவத்தொண்டில் ஈடுபட்டார். பொழுது புலர்வதற்கு முன், அக்கோயில் முற்றத்தில் திருவலகு இடுதலான திருப்பணிகளைச் செய்தும், பெருக்கியும், நல்ல பசுவின் சாணத்தால் நன்கு திருமெழுக்கிட்டும், மலர்களைக் கொய்துகொண்டு அழகிய மாலைகளைத் தொடுத்து இறைவனுக்குச் சாத்தியும், அன்பர் பலரும் பாராட்டுகின்ற பண்பினால் சிவப்பணிகளை ஆற்றினார். இவ்வாறு தெய்வப் பணிகளைச் செய்துவரும் நாளில், தம் தம்பியார், தீவினையால் பரசமயம் புகுந்து நிற்றலை நினைந்து மிகுந்த துன்பமுற்றார் திலகவதியார். திலகவதியார், வீரட்டான இறைவனைத் தொழுது,

**தூண்டு தவ விளக்கு அனையார்**
**சுடர் ஒளியைத் தொழுது என்னை**
**ஆண்டு அருளும் நீராகில்**
**அடியேன் பின் வந்தவனை**
**ஈண்டு வினைப் பர சமயக்**
**குழி நின்றும் எடுத்து ஆள**
**வேண்டும் எனப் பல**
**முறையும் விண்ணப்பம் செய்தனரால்**
**- (திருத்தொண்டர் புராணம் 12:21:46)**

என்று பலமுறை வேண்டி மனமுருக விண்ணப்பித்து நின்றார். இறைவன், மருள்நீக்கியாரைச் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டான். தமக்கையாரின் வேண்டுதலுக்கிணங்கி



அருளும் ஆரம்பமாக இது அமைந்தது.

திருஞானசம்பந்தருடன் இணைந்து திருமறைக்காட்டில் மறைக்கதவம் திறக்கவும், மூடவும் திருப்பதிகங்கள் பாடி இறை அருளைப் போற்றினர். திருவீழிமிழலையில் இறைவனிடம் படிக்காசு பெற்று, பஞ்சம் தீர்த்தனர். தலயாத்திரை புரிந்து, சைவ சமயத்தை வளர்த்து, தமிழ் மொழியைத் தழைக்கச் செய்து, பத்தி மையங்கள் தோன்றி வளரக் காரணமாய் அமைந்தார்கள். தமிழ்நாட்டிலுள்ள திருத்தலங்கள் மட்டுமல்லாது, ஆந்திரா, கர்நாடகம், வாரணாசி போன்ற தலங்களையும் வழிபட்டு இறுதியில் இமயமலைவரை சென்று, கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் கண்டவர் அப்பர்.

தமிழ்த் தோத்திரங்கள் வரிசையில் பன்னிருத்திருமுறைகள் இடம்பெறுகின்றன. இவ்வரிசையில் திருநாவுக்கரசரால் பாடப்பட்ட தேவாரமும் அடங்கும். திருநாவுக்கரசர் அருளிய பதிகத்தில் **'திருத்தாண்டகம்"** என்னும் யாப்பு அமைய, பாடப்பட்ட பதிகங்களை **'6ஆம் திருமுறை'** என்றும், **'திறுக்குறுந்தொகை'** என்னும் யாப்பு அமைய பாடப்பட்ட பதிகங்களை, **'5ஆம் திருமுறை'** என்றும், ஏனைய பதிகங்களை **'4-ஆம் திருமுறை'** என்றும் வகுக்கப்பட்டுள்ளது வாகீசரது திருப்பதிகங்கள் அனைத்தும், திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்ற யாப்பு நிலைகளில் அமைந்து, தமிழ் மொழியின் செழுமைக்குப் பக்கபலமாய் உள்ளன. சைவ சமய புனித நூல்களின் இரு பெரு பிரிவுகளாக விளங்குவன தோத்திரங்களும் சாத்திரங்களுமாக இறைவன் இருக்கிறான் என சைவ சமயம் கூறுகின்றது. இதனையே திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில்,**"தோத்திரமும் சாத்திரமும் ஆனாய் தாமே (திருமுறை 6:778)** என்கிறார்.

பல்லவர் காலத்தில் சைவ சமயத்தவர் மத்தியில் பேராதரவு பெற்றிருந்த பத்தி இயக்கத்தின் தலைமைச் செயற்பாட்டாளர்களில் ஒருவராகத் திகழ்ந்து **"என்கடன் பணிசெய்து கிடப்பதே"** என்பதற்கேற்பத் தம் தூய **"தொண்டுநெறி"**யால் தாசமார்க்கத்தில் ஈடுபட்டு பத்திநெறியில் வாழ்ந்து சித்திரைச்சதய நன்னாளில் **"சிவப்பேறு"** பெற்றவர் திருநாவுக்கரசர்.

**திருச்சிற்றம்பலம்**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்

# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**திருநாட்டுச் சிறப்பு - பாடல் 1**

**பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுட்**
**கோட்டுயர் பனிவரைக் குன்றி னுச்சியில்**
**சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி**
**நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன்**

**பொருள்:-** தமிழ் இலக்கணத்துள் வகுத்துக் கூறிய பாட்டாகிய இயற்றமிழுக்குப் பொருளாகப் பரந்த எல்லைக்குள்ளே காணும்பல நாடுகளுக்குள், மலைகளில் பெரிய இமயமலையினது உயர்ந்த சிகரத்தின் உச்சியிலே, புலிக்கொடியை நாட்டி வளர்கின்ற சோழர்களால் அரசாளப் பெற்ற காவிரி நாட்டினது சிறப்புக்களை நான் சொல்லத் தொடங்குகின்றேன்.

(விரிந்த சோழப் பேரரசில் ஆசிரியர் நாட்டுச்



**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**



பவானி சிவ
அ.வேலுச்சாமி

சிறப்பிலே காவிரி பாய்ந்து வளம் செய்யக்கூடிய சோழநாட்டையும் அதன் சிறப்புக்களையுமே எடுத்துக் கொள்கின்றார்.)

**வி. உரை:- பாட்டு இயற்றமிழ் உரை பயின்ற எல்லை:-** இங்குப் பாட்டு என்பது திருமலைச் சிறப்பிலே ஆசிரியர் கூறிய அலகில் சீர் நம்பியாரூரர் பாடிய திருத்தொண்டத்தொகை என்ற குறிப்பு கருதலும் காண்க என்று சிவக்கவிமணி ஐயா உரையிலே குறிப்பிட்டுள்ளார்கள்.

தலைமைபற்றி இயற்றமிழ் என்றமையால் அதன் இனமாகிய இசைத்தமிழ் நாடகத்தமிழ் இவைகளையும் கொள்க. இயற்றமிழின் மேன்மையும் புகழும் பயின்ற எல்லை என்க.

காவிரி தோன்றுவதும் வருவதும் வேறு பற்பல நாடுகளாயிருப்பவும் அதுபாய்ந்து சிறப்பாய் வளப்படுத்துவது சோழநாடேயாம். ஆதலின் சோழர் காவிரி நாடு எனக் குறித்தார் என்றலுமாம் நாட்டியல்பு என்பது நாட்டின் சிறப்பியல்பு.

**பாடல் - 2**

**ஆதிமா தவமுனி அகத்தி யன்தரு**
**பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி**
**மாதர்மண் மடந்தைபொன் மார்பில் தாழ்ந்ததோர்**
**ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால்.**

**பொருள்:-** முதன்மைபெற்ற பெரும் தவமுனிவராகிய அகத்தியமுனிவர் கொணர்ந்த பூதநீரைக் கமண்டலத்தில் இருந்து கவிழ்த்ததனால் பெருகிய காவிரி ஆறானது அழகிய பூமியாகிய பெண்ணினது பொன் மார்பிலே தாழ்ந்து வளைந்து கிடந்ததாகிய தண்ணிய நீர்மை பெற்று விளங்கும் ஒரு முத்துமாலை போன்றுள்ளது.

**வி. உரை:- ஆதி:** முதன்மை இது தவத்துக்கும், முனிவனுக்கும் ஆம். அவரது தவத்தின் பெருமை

கடல்குடித்தல் விந்தத்தை அடக்குதல் இராமன் முதலியோர்க்கு அருளுதல் முதலிய பலவற்றாலும் அறியப்படும். அவரது பெருமை இறைவனது திருமணத்தின்போது எல்லாத் தேவர் முனிவர் முதலியோரும் கூடிய வடக்குத்திசை தாழ, அதைச் சமனாக்க இறைவனது ஆனையினால் தாம் ஒருவரே தெற்கில் போந்து பொதிய மலையில் தங்கிச் சமன் ஆக்கினார் என்பதால் அறியப்படும். சிவசமானர் என்று கருதப்பெறுபவர். தமிழுக்குத் தலை ஆசிரியராய் எண்ணப்பெறுபவரும் இவரே சிவபெருமான் ஒருவரையே இவர் தேடி அடையும் தன்மை உடையார் என்று வாழ்மீகி இராமாயணத்தில் பேசப்பட்டுள்ளதாக சிவக்கவிமணி ஐயா உரையில் கூறியுள்ளார்.

**பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி:-** சூரமன்பமனாகி அசுரர்களுக்குப் பயந்து இந்திரன் சீர்காழியில் புகலடைந்து, அங்கே நந்தவனம் வைத்து இறைவனை வழிபட்டு வருங்கால் அது நீரின்றி வாடியதனால் விநாயகக் கடவுளை வழிபட்டு வேண்டினன். அப்போது அகத்தியர் தம் கமண்டலத்திலே ஆகாய கங்கையைக் கொண்டு தென்திசை போந்த சமயம் குடகு நாட்டிலே விநாயகர் அக்கமண்டலத்தைக் கவிழ்க்க அது காவிரியாகப் பரந்து ஓடிச் சோழநாட்டில் புகுந்து நந்தவனத்தைச் செழிக்கச் செய்தது என்பது சரிதம்.

**மாதர்மண் மடந்தை பொன்மார்பில் தாழ்ந்தது:** மாதர் – அழகு, மண்மடந்தை – பூமிதேவி, பொன்மார்பு – பொன்னிறமுடைய மார்பு, மண்ணிற்கு நிறம் பொன்மை, நீருக்கு நிறம் வெண்மை, "பொன்மார் புனல் வெண்மை" என்பது சைவ சாத்திரம். இது முதல் ஒன்பது பாடல்கள் காவிரியின் சிறப்பை ஆசிரியர் போற்றுகின்றார்.

**பாடல் - 3**

**சையமால் வரைபயில் தலைமை சான்றது**
**செய்யலு மகட்குநல் செவிலி போன்றது**
**வையகம் பல்உயிர் வளர்த்து நாள்தொறும்**
**உய்யவே சுரந்து அளித்து ஊட்டும் நீரது.**

**பொருள்:-** காவிரியாறு மேற்குதொடர்ச்சி மலையினின்றும் வரும் பெருமையில் சிறந்தது. செம்மை செய்யும் பூமகளை வளர்க்கும் செவிலித்தாய் போன்றுள்ளது. உலகில் உள்ள எல்லாவகை உயிர்களையும் வளரச் செய்து தினமும் அவைகள் உய்யும்படி சுரந்தும் அளித்தும் ஊட்டுகின்ற நீர்மையுடையது.

**வி.உரை:- சையமால்வரை:** பரதகண்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலே காவிரிக்கு உற்பத்தித் தானமாய் விளங்கும் மலைத்தொடர் சையமலை என்பர். இது குடகு நாட்டில் உள்ளது.

**நாள்தொறும்:** பெருகிய காலத்து நீர்ப் பெருக்கினாலும், வசந்த காலத்து நீர் ஊற்றினாலும், ஊட்டுதலின் எந்நாளும் என்க. இவ்விரண்டும் சேர்த்துச் "சுரந்தும் அளித்தும் ஊட்டும்" என்றார். காவிரியின் நீர் முழுவதும் உலகினை ஊட்டி உய்விப்பதற்கே அன்றி ஏனை ஆறுகள்போல வறிதே கடலில் போதல் இல்லை ஆதலின் திருமூலதேவநாயனார் புராணத்தில் ஆசிரியர் பெருமான் "கடல்வயிறு நிறையாத காவிரி" என்று போற்றுகின்றார்.

உயிர்கள் சிவப்பணிவிடையில் முயல்வதற்கு உரிய பூவும் நீரும் ஆகிய சாதனங்களைத் தருவதேயன்றி தானும் பூசை செய்து வழிபட்டு ஆன்மாக்களையும் வழிப்படுத்தும் என்பது ஏழாவது திருப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர் பெருமான்.

**உய்யவே சுரந்து அளித்து ஊட்டுநீரது:** சுரத்தலால் பிரம்மனையும் அளித்தலால் கங்கையையும், ஊட்டுதலால் உமாதேவியையும், உய்யத்துணை செய்தலால் சிவனடியார்களையும், ஒப்பாகுவது என்று பின்னர் விரித்துக் கூறி அருளினார். காவிரி இந்த உலகில் போந்தது இந்திரன் சிவபூசைக்காகச் சீர்காழியில் வைத்த நந்தவனத்தைக் காப்பாற்றுதற் பொருட்டே என்று மேலே கொள்ளப்பட்டது. காக உருவம் கொண்ட விநாயகப் பெருமான் அகத்தியரது கமலண்டலத்தைக் கவிழ்க்க, அதனின்று பெருகி விரிந்த காரணத்தால் காவிரி என்று காரணப் பெயர் பெற்றது என்பர். கவேரி முனிவர் ஆசிரமத்தின் வழி வந்தமையால் அவர் பெயரால் மலர் வனத்தை வளர்க்கும் காரணம் பற்றியாதலின் அச்சிறப்பு நோக்கி **"வளர்த்து"** எனத் தொடங்கிக் காட்டினார்.

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம்: பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**கடைகள், நிறுவனங்கள், பாடசாலை அதிபர் அறைகள், திணைக்களப் பணிப்பாளர் அறைகள், அரச அதிகாரிகளின் அலுவலகங்கள் என்று எங்கு பார்த்தாலும் பிள்ளையார், முருகன், இலக்குமி படங்கள் வைக்கின்றார்களேயொழிய, சிவபெருமான் திருவுருவப்படம் வைக்கும் வழக்கு ஏன் பெரிதாக இல்லை?**

இந்துசமயம் என்னும் ஒருமைப்பதத்தால், இந்தியாவில் தோன்றிய அனைத்துச் சமயங்களும் ஒருங்கிணைத்து நோக்கப் படும் முறைமை ஏற்பட்டபிறகு, சைவசமயத்தவர் இந்துவென்பது பல சமயங்களின் பொதுப்பெயர் என்பதனை மறக்கத் தலைப்பட்டனர். இதனால், இந்துவென்ற பெயரில் அனைத்துக் கொள்கைகளையும் தம்சைவசமயக் கொள்கையென்றே எண்ணத்தொடங்கினர். மேலும், பிரமமே திருமாலாய் சிவனாய் உயிராய் எல்லாம் போலிக்காட்சிக்கு உள்ளாகி நிற்கின்றது என்னும் ஏகான்மவாத சுமார்த்தமதக் கொள்கைகள், வேதாந்தம் என்னும் பெயரிலும் இந்துவென்ற அடையாளத்திலும் பரவத் தொடங்கின. இம்மதக் கொள்கைப்படி, பிரமத்தின் சாத்வீகக்குண வடிவு திருமால் என்பதும் பிரமத்தின் தாமசக்குண வடிவு சிவபெருமான் என்பதுமாகும். தாமசக்குணம் என்பதுதான் கோபப்படுவது முதலிய இயல்புகளாம். எனவே, சிவபெருமானை வைத்து ஒழுங்காக வழிபடாவிட்டால், அவர் கோபப்படுவார் என்றும் பிழையைப் பொறுக்கமாட்டார் என்றும் ஏகான்மவாத சுமார்த்தமதக் கொள்கைவழி சைவசமயத்தவரும் கருதத்தொடங்கினர். ஆனால், சைவசமயப்படி சிவபெருமான் மங்கல எண்குணத்தராகும். தன்வயத்தனாதல், தூய உடம்பினன், இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியவன், முடிவிலா ஆற்றல் உடையவன், இயற்கை உணர்வினன், முற்றறிவு உடையவன், பேரருள் உடையவன், முடிவிலா இன்பம் உடையவன் என்பன சிவபெருமானின் மங்கல எண்குணங்களாகும்.

சைவசமயக் கொள்கைப்படி, இராஜச சாத்வீக தாமசக் குணங்கள் என்பவை உயிருக்கு உரியவையேயொழிய, இறைவனுக்குரிய குணங்களாகா! ஏகான்மவாத சுமார்த்தமதத்தில் கடவுளே உயிராகவும் உலகாகவும் இருப்பதால், உயிர் கடவுள் என்னும் பேதங்கள் இன்மையால், உயிருக்குரிய குணங்களைக் கடவுளின் சகுணப்பிரம்மக் குணங்களாக ஏற்றி இடர்படும். ஆனால், சைவசமயம் சிவபெருமானைக் கருணைக் கடலாகவே போற்றுகின்றது. வில்லால் அடித்த அருச்சுனனனையும் பிரம்பால் அடித்த பாண்டியனையும் சிவபெருமான் ஆண்டருள் பாலித்ததாகவே வரலாறு உண்டு. கல்லால் அடித்த சாக்கிய முனிவரை நாயனாராக்கி உயர்த்தினார் சிவபெருமான். வேறெந்தவொரு சமயத்திலும் தம் கடவுளைக் கல்லாலும் வில்லாலும் பிரம்பாலும் அடித்த வரலாறுகளோ, அடித்தவருக்கே அருள்பாலித்த வரலாறுகளோ இல்லையாம்.

**‘பின்னை என் பிழை பொறுப்பானை**
**பிழையெல்லாம் தவிரப் பணிப்பானை’**
**- சுந்தரமூர்த்தி சுவாமிகள்**

சிவபெருமான் தம் பிழையெல்லாவற்றையும் பொறுக்கும் பெருங்கருணைக் கடவுளாகவும், பிழைகளைகளிலிருந்து மீட்டுக் காத்தருளும் தாயினும் இனிய தயவாளனாகவும் சுந்தரமூர்த்தி நாயனார் நமக்கு அருளிச்செய்திருப்பதே தமிழர் கொள்ளவேண்டியதாகும். ஆனால், இவ்வுண்மைகளை உணராது நம்குருமாரில் ஒருசாராரும் நம் பெரியவர்களில் ஒரு சாராரும் ஏகான்மவாத சுமார்த்தமதக் கொள்கையையே இந்துமதமாகக் கொண்டு, அம்மதக் கொள்கைப்படி சிவவழிபாட்டை அதிபக்குவருக்கு உரியதென்று திரிக்கத் தொடங்கினர். இராமன் சிவபெருமானை வழிபட்டு நோன்பிருந்து சிவதீக்கையை அகத்தியரிடம் பெற்று சிறப்புப் பெற்றதனாலேயே இராவணனை வென்றான் என்று பத்மபுராணம் கூறுகின்றது. கண்ணன் உபமன்யு முனிவரிடம் சிவதீக்கை பெற்ற வரலாற்றை மகாபாரதம் கூறுகின்றது. எறும்பு சிவபெருமானை வழிபட்டு உயர்வுபெற்ற தலம் திருஎறும்பியூர். இவ்வாறு கரிக்குருவி நாரை சிலந்தி யானை என்று அனைத்து உயிரினங்களும் சிவபெருமானை தம்சத்திக்கு ஏற்ப வ்ழிபட்டு உயர்ந்தனர் என்பதுவே வரலாறு. எனவே, சிவவழிபாடென்பது அனைவருக்குமானது. சிவவழிபாடு மட்டுமே நம் வினையைக் கெடுக்கும். இவ்வுண்மைகளை நன்குணர்ந்து சைவசமயத்தவர் தமது அனைத்து வழிபாடுகளிலும் சிவபெருமானை முதன்மைப்படுத்தி வழிபடுதல் வேண்டும்.

சிவபெருமானை அழையாதும் முதன்மை செய்யாதும் நடந்த தக்கன்வேள்வியும் தாருகாவனத்து முனிவர் வேள்வியும் ஒழிந்ததாகவே புராணம் உண்டு! சிவபெருமானின் திருவுருவம் வேண்டாம் என்றும், சிவபெருமானின் திருவுருவம் அவசியம் இல்லை என்றும் கருதி, நாம் பிள்ளையார் முருகன் இலக்குமி படங்கள் வைத்து வழிபட்டால் ஒருபோதும் அத்திருவுருவங்களில் அருள் எழுந்தருளப்பெறா! தந்தையை மதியாதவிடத்து தனயர் எங்ஙனம் எழுந்தருளுவர்? எல்லாம் சிவவடிவேயென்னும்போதும், கூத்தப்பெருமான் ஏறமர் கடவுள் (இடபாரூடர்) முதலிய வடிவங்கள் வேண்டாம் என்றும் பிள்ளையார், முருகன் வடிவங்களே போதும் என்றும் கருதும் நம் வஞ்சக்குணத்திற்கு எங்ஙனம் திருவருள் எழுந்தருளிக் காக்கும்? எனவே, தமிழர் சிவவழிபாட்டை நன்கு பற்றிக்கொள்வதே உயர்வதற்குரிய ஒராவழியாகும்.

**“நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலம் மிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே”**

என்றார் ஔவையார் பெருமாட்டி. உயிர்கள் சார்ந்ததன் வண்ண மாம். அதாவது, நல்லாருடன் சேர்ந்தால் நல்லவராகும். தீயாருடன் சேர்ந்தால் தீயவராகும். சிவபெருமான் ஒருவனே செம்பொருள்! சிவபெருமான் ஒருவனே மங்கலப்பொருள்! சிவபெருமான்

ஒருவனே தலைமைப்பொருள்! சிவபெருமானைச் சார்ந்து நின்றால் தமிழர் தலைமை நிலையை எய்துவர்! தமிழர் மங்கல நிலைபெற்று விளங்குவர்! எனவே, சிவபெருமான் திருவுருவப்படங்களைப் பொன்னார்மேனி வடிவில் சுவாமிப் படங்களில் நடுநாயகமாக வைத்து வழிபடும் மரபைத் தமிழர் கைக்கொள்ளுதல் வேண்டும். அதுவே நம்மை மீட்டெடுக்கும்! எங்கள் இனத்தை உயர்த்தும்!

**திருச்சிற்றம்பலம்**




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Foundation Stone Laying Ceremony for the "Mutharsangam" Historical Memorial Hall

The foundation-stone laying ceremony for the "Mutharsangam" historical memorial hall, soon to be built at the Thennadu Senthamizh Aagama Sivamadam, was held on Saturday, 4 July 2026. The event was graced by the presence of six Saiva Adheenam Guru Maha Sannidhanams of Tamil Nadu.

Our Sivamadam was founded on 3 June 2020, and for six years since has worked, by divine grace, to preserve Saivam and Tamil culture and to hand them on to the next generation. The Mutharsangam hall marks the next step in that work: a building raised in memory of the First Tamil Sangam of Thennadu, the legendary academy said to have flourished in the region before it was submerged by the sea, and over which Lord Shiva himself is said to have presided as its refinements shaped the early Tamil language. The foundation stone laying was carried out at the direction of the presiding deities of the Sivamadam, Ambaal Manonmani Amman and Lord Aimputhanathar.

By the grace of Lord Aimputhanathar, six Saiva Adheenam Guru Maha Sannidhanams of Tamil Nadu, visited our Thennadu Sivamadam together that day: Seervalarseer Maasilamani Desika Gnanasambandha Paramacharya Swamigal; the 18th Guru Maha Sannidhanam of the Velakkuruchi Adheenam, Seervalarseer Sathiyagnana Mahadeva Desika Paramacharya Swamigal; the 103rd Guru Maha Sannidhanam of the Sengol Adheenam, Seervalarseer Sivaprakasa Desika Sathiyagnana Paramacharya Swamigal; the 25th Guru Maha Sannidhanam of the Perur Adheenam, Thiruperunthiru Santhalinga Marudhachala Adigalar; the Guru Maha Sannidhanam of the Palani Sadhusamigal Madam, Thavathiru Sadhu Shanmuga Adigalar; and the Guru Maha Sannidhanam of the Thenserimalai Adheenam, Thavathiru Muthusivaramasamy Adigalar.

The visiting Guru Maha Sannidhanams first offered worship at the sanctum of Aimputhanathar, then took part in a kolu pooja honouring the guru lineage and gave their blessings to those gathered. A street procession followed, leading to the site marked out for the Mutharsangam hall. There, in what is believed to be the first time six Saiva Adheenam Guru Maha Sannidhanams have come together for such an occasion, they laid the foundation stone of "Mutharsangam" with their own hands, a building raised in memory of the First Tamil Sangam of Thennadu.

The event was organised under the direction of Thennadu head Sivathiru Thennavan Partheepan. Alongside the Guru Maha Sannidhanams, it was also attended by Seervalarseer Chokkalinga Thambiran Swamigal, inquiry-officer of the Dharmapuram Adheenam for the Thiruvaiyaru Arulmigu Panchanadeeswarar Swami temple; Munaivar Seervalarseer Mouna Thirugnanasambandha Thambiran Swamigal, inquiry-officer of the Dharmapuram Adheenam for the Trichy Mouna Madam; Thiruvavaduthurai Adheenam poet Subramaniam Kunjithapatham Ayya; Thavathiru Rishi Thonthunathan Swamigal of the Kopay Subramaniya Kottam; Professor Sivakkozhundhu Sirisathkunarasa Ayya, former Vice-Chancellor of the University of Jaffna; Senthamizhchcholaruvi Chandramowleesan Laleesan Ayya, Principal of the Kopay Teachers' College; and numerous devotees, all of whom lent distinction to the occasion.

This gathering of six Saiva Adheenam Guru Maha Sannidhanams of Tamil Nadu marks a significant moment in the Saiva history of Eelam, and an important milestone in the growth of Thennadu.

# Saiva Saint Thirunavukarasar - Master of the word





Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

The Periya Puranam counts Tirunavukkarasar among the four most effective of the Saiva saints, and among the three foremost of the Nayanmars whose hymns are known as the Thevaram. His own hymns form the fourth, fifth and sixth of the twelve sacred books of the Saiva canon. The account in Periyapuranam presents his life as a struggle to achieve faith.

### His background

Pugazhanar was a farmer devoted to Siva, and he had two children. The elder was Thilakavathi and the younger was Marulneekkiyar (the saint in highlight). Thilakavathi was promised in marriage to a young soldier. He was killed in battle, and she gave up the thought of marriage and took to an ascetic life spent in the worship of Sivaperuman, cultivating her inherent qualities of patience and piety.

### The Jain years

Marulneekkiyar could not stay within the family's tradition as he sought more vast explorative practices of ritualistic peace. He joined the Sramana sect at Pataliputra, and for nearly four decades he studied Jain religion and philosophy and became an expert in it. He took the name Dharmasena and rose to a high position in the Jain order. His sister was troubled by this and prayed for him at the temple of Tiruvathigai Veerattanam.

At Pataliputra, Dharmasena fell ill with a severe colic that the medicines and mantras of the Jains could not

cure. Unable to find relief, he recognised the grace of Siva through the guidance of his sister, popularly used as a tool of dramatic indoctrination for children these days, and returned home. He reached Tiruvathigai Veerattanam, and Thilakavathiyar gave him holy ash blessed with the Ainthu Ezhuthu (Namasivaya). The pain left him at once. He went into the temple and sang a hymn, and his illness was gone. He returned to Saivite worship and took the name Tirunavukkarasar, the triumphant of Language/ the tongue, for the hymns he composed in praise of the lord.

### The king's challenge and its resolution

His return to Siva worship displeased the Pallava king Mahendravarman, who was a Jain. The king tried to have him killed. Tirunavukkarasar was thrown into a lime pit for a week, given poisoned food, and set before an elephant to be trampled. He repeated the name of the lord and sang his praise, and came through each of these without harm.

He was then tied to a stone and thrown into the sea. He repeated the Ainthu Ezhuthu (Namasivaya) and sang a hymn. The rope loosened, the stone floated, and he sat on it and reached the shore. When the king saw that he could not be killed, he recognised the saint's sincerity, became a follower of Siva, and under the saint's influence repaired and built temples.


### His miracles

Several miracles are told of him. He brought back to life the son of Apputhi Adikal, who had been bitten by a cobra. During a famine, he was given a gold coin each day from the Lord to continue his charity. His hymn opened the doors of the temple at Tirumaraikkadu. The Periya Puranam records that he undertook a satyagraha to recover a Sivalinga taken by the Jains at Pazhayarai.

Late in his life he set out for Kailasam, but grew too weak on the way to complete the journey. At Tiruvaiyaru, after bathing in the river, he was granted the vision of the supreme abode.

### How he is remembered

After a life spent in the service of Siva, he prayed at the end, "Here I am, coming to your holy feet,"



and merged with Sivaperuman at Tiruppugalur. He is remembered for his humility and his service. He carried a hoe wherever he went, so that he could clean the pathways to the temples he visited. He was close to the child-saint Jnanasambandhar, who called him Appar, meaning father, and the name stayed with him. He was also known as Vakeesar and Thandakavendar, stemming from his complex compositions of the thiru thandakam and other symbolic works. His life is a great field of research and a complex and spiralling study, a topic on which scholars undertake their PhDs. Even the latter part of his final year, when he was tested with distractions of the material world- all riches and pleasures that an earthly 81-year-old world falls for, he is commended by the Saiva clan for obviously being absolutely collected, but also not being offended by these silly and cheap distractions, which is a greater test to examine his calmness.

The beloved saint is commemorated ceremoniously year on year in homes, schools, temples and Tamil institutions on the Sithirai Sathayam Nachahtiram, by reflecting on his biography and his compositions.

# யாழ் பல்கலைக்கழக முதலாவது சைவசித்தாந்த ஆய்வு மாநாட்டில் பேராசிரியர் நல்லூர் ச.சரவணன் அவர்களின் ஆதார சுருதி உரை



பேராசிரியர் நல்லூர் ச.சரவணன்
தலைவர் - சைவசித்தாந்த துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

ஆதார சுருதி உரையானது இரண்டு சிந்தனைகளை உங்களுக்கு முன்வைக்கின்றது. ஒன்று நம்முடைய மரபானது அல்லது தமிழர் தத்துவ மரபு என்று சொல்லப்படுகின்ற சைவசித்தாந்தம் எப்படிப்பட்ட சிந்தனையை உலக அளவில் தற்கால சூழமைவை எதிர்கொள்கிறது. அல்லது தற்கால சூழமைவிற்கு எப்படி தன்னுடைய கருத்தியலை வழங்கியிருக்கிறது என்பதனை நாம் தெரிந்து கொள்கின்ற ஒரு அடிப்படை வரலாற்றையும், நம்முடைய கருத்தியல் அல்லது கொள்கை விளக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்பது தான் என்னுடைய இரண்டு வகையான செய்திகளாக அமையும்.

(கடந்த திங்கள் தொடர்ச்சி)

அந்த எதிர்கொள்ளப்பட்டதைத்தான் அவர், **“நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக நீலமணி மிடற்றான் நீர்மையே மேல் உணவந்து எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும் அக்கோலத்து அவ்வுருவே ஆம்”** என்று பாடுகிறார்.

இது மிக முக்கியமானது. கடவுள் கொள்கை பற்றிய ஒரு வேறுபாடு அதனுடைய மோதல்கள் வரும்பொழுது ‘எக்கோலத்து உருவம் என்ற பார்வையைக் காரைக்கால் அம்மையார் முன்வைக்கிறார். எத்தவங்கள் எதுவாக இருந்தாலும் அக்கோலத்து அவ்வுருவம் என்பதாக உங்களுக்குக் கடவுள் கொள்கையை நீங்கள் உணர்வது படிப்பினால் அல்ல நீங்கள் செய்திருக்கிற நூல்களால் உணர முடியாது. அது இசுலாமியமாகட்டும், அல்லது கிறித்தவமாகட்டும், அல்லது வைதீகமாகட்டும் இவை எல்லாவற்றிற்குமே காரைக்கால் அம்மையார் தருகிற ஓர் அறைகூவல் அல்லது அறிவுறுத்தல் என்ன என்று கேட்டால் நுழைவு வேண்டும்.



தொகுப்பாளர்
செல்வி. சதீஸ்வரன் டிலக்ஷனா
நான்காம் வருட மாணவி
யாழ் பல்கலைக்கழகம்

(05) இதுதான் நாம் சைவம் சார்ந்து காரைக்கால் அம்மையார் மூலமாக இந்த உலகத்திற்குச் சொல்கிற செய்தி. முதலில் உனக்கு ஒரு பொறுமை வேண்டும் என்று நாம் ஒரு செய்தியை அல்லது செயலைச் செய்ய வரும்போது சொல்லுவோம். அப்படியானால் நீ செயலைச் செய்ய வருகிற காலத்தில் உனக்கு ஒரு பொறுமை வேண்டும் என்று சொன்னால் உனக்கு ஏதாவது ஒரு அனுபவம் இருக்க வேண்டும் என்பது பொருள். உனக்கு அதற்கான உழைப்பு எந்த வகையில் இருக்கிறது என்பதுதான். உழைப்பு என்பதுதான் அனுபவத்திற்குரியது. உழைப்பிற்கும், அந்த உழைப்பு சார்ந்து வருகிற அனுபவத்திற்கும் கொஞ்சம்கூட இடம் கொடுக்காமல் ஒரு நூல் பட்டியலை வைத்துக்கொண்டு நீ படித்திருப்பதை வைத்துக்கொண்டு இதையெல்லாம் பேசினால் இந்த உலகம் எந்தக் காலத்திலேயும் மேன்மை அடையாது என்பதைத் திட்டவட்டமாகக் காரைக்கால் அம்மையார் பேசுகிறார்.

இதுதான் கொள்கையின் முதல் படி. சைவ சித்தாந்தம் என்கிற கொள்கை வழங்குகிற முதல் படி நாம் இது வரைக்கும் வந்ததைச் சமன்படுத்தவில்லை. இந்த மனிதர்களை நான் சமன்படுத்துகிறேன். இந்த மனிதர்களுடைய செயல்பாட்டில் உழைப்பு என்கின்ற தகுதி இல்லை. ஆனால் அவர்களுக்கு எந்தவிதமான தகுதியும் இல்லை என்பதை நாம் உணர்த்த வேண்டும். எல்லாவற்றிலேயும் உழைப்புக்கு மாறாக நாம் இந்தச் சமூகத்திலே எல்லாவற்றையும் கொடுத்துவிட வேண்டும் என்று ஏமாற்றுவது என்பது மிகவும் தவறான ஒன்று

என்பதையும் அது எந்தவிதமான சமயமாக இருக்கட்டும் அது வேதமாக இருக்கட்டும் அல்லது பைபிளாக இருக்கட்டும் அல்லது குரானாக இருக்கட்டும் எந்த நூலாக இருந்தாலும் அந்த நூலை வைத்துக்கொண்டு மட்டுமே நீங்கள் சொல்வது என்பது ஒரு தவறான செய்தி.

உழைப்புக்கு எந்த இடம் கொடுக்கிறார்கள் என்பதைப் பார்த்தால்தான் நீ எந்தத் தெய்வத்தை உன்னுடைய அடையாளமாகச் சொன்னாலும் கூட அது தெய்வத்தை அடைகின்ற ஒரு முயற்சியாக இருக்குமே தவிர உழைப்புக்கு மாறாக நீ சொல்கின்ற சொற்கள் எவையும் உனக்கு அதைத் தராது என்பதைக் காரைக்கால் அம்மையார் திட்டவட்டமாகச் சொல்கிறார். எல்லாக் காலத்திலும் உலகம் தன்னுடைய வியாபாரத் தன்மையில் மோதிக்கொண்டு இந்த வார்த்தைகளால் ஏமாறுகிற போக்கிலிருந்து விடுபடுவதற்காக அதைப் பேசினார் என்பதாக நீங்கள் அதை உணர வேண்டும் என்று நான் இங்கே மறுபடியும் குறிப்பிடுகின்றேன். அடுத்து நாம் இந்த உலகத்தைப் பற்றிப் பேசும்பொழுது நான் தொடக்கத்திலேயே சொன்ன அந்தப் பாடல்

**"அவனே இருசுடர்த் தீ ஆகாயம் ஆவான்**
**அவனே புவி புனல் காற்று ஆவான்**
**அவனே இயமானனாய் அட்ட மூர்த்தியுமாய்**
**ஞானமயனாகி நின்றானும்"**

என்று பேசுகிற அந்தப் பாடலைப் பிற்காலத்திலே நமக்கு திருஞானசம்பந்தரும் எடுத்துப் பேசியிருக்கிறார்.

**"ஈராய் முதல் ஒன்றாய் இருபெண் ஆண் குணம் மூன்றாய்**
**மாறாமறை நான்காய் வரும்பூதம் அவை ஐந்தாய்**
**ஆறார் சுவை ஏழோசையோடு எட்டுத்திசை தானாய்**
**வேறாய் உடனானான் இடம் வீழிமிழலையே"**

என்று திருவீழிமிழலைப் பதிகத்தை அவர் பாடியிருக்கிறார்.

இந்த இருவரையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு மிக முக்கியமான செய்தியை இந்த உலகத்திற்கு நாம் சைவத்தின் செய்தியாக வழங்க வேண்டும். அதாவது இந்த உலகத்தில் இருக்கின்ற பொருள்களை நான் எதுவாகப் பார்க்கிறேன்? இந்த உலகத்தில் நமக்கு உறவுகள் என்பது உண்மையானது. ஆனால் உறவுகள் மூலமாக மேற்கொள்ளப்படுகிற செயல்பாடுகள் சிறுமையாக அமையுமானால் உறவுகள் என்பது உண்மையானவை அல்ல என்று பேசக்கூடாது.

எவையெல்லாம் இந்த உலகத்தில் உன்னால பார்க் கப்படுகின்றனவோ அவை எல்லாம் உண்மையானவை. உண்மையான இந்தப் பொருள்களினுடைய ஒரு உறவை நான் எப்படிப் பெற்றிருக்கின்றேன் எப்படி அவற்றைக் கையாளுகின்றேன் எப்படி அவற்றோடு என்னுடைய செயல்பாட்டை நான் நகர்த்துகிறேன் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்திக்கவில்லையானால் உலகத்தை நீங்கள் முழுமையாக நீங்கள் பிரதிபிம்பமாகவோ எல்லாம் பொய் என்பதாகவோ நீங்கள் பேசி உங்களுடைய வாழ்க்கையை நீங்கள் அலைக்கழித்துக்கொள்வதும் மற்றவருடைய வாழ்க்கையைச் சீரழிப்பதுமான செயற்பாட்டை மேற்கொண்டுவிடுவீர்கள்.

அந்த எச்சரிக்கை உணர்வை மாற்றுவதுதான் மிக முக்கியமானது. இந்த உலகமாக அவனே இருசுடர்த் தீ ஆகாயம் எல்லாமாகவும் இருக்கிறான். அட்டமூர்த்தியாக இருக்கின்றான். இயங்குகிறவனாக இருக்கிறான். இயமானனாய் என்பதாகப் பேசுகிறார். அதனால்தான் நம்முடைய திருஞானசம்பந்தர் அதை அப்படியே எடுத்து இந்த அடிப்படையில் நீங்கள் வேதத்தைப் பார்க்க வேண்டும் என்று பேசுகிறார். வேதத்தைப் பார்க்க வேண்டுமானால் நீங்கள் அந்தப் பொருள்களின் மூலமாக இருக்கிற இந்தப் பொருள் பார்வையானது உங்களுக்கு வெறுமையானது இல்லாததை நீங்கள் பார்த்துவிட்டீர்கள், அதைப் பிரதிபிம்பமாகப் பார்த்துவிட்டீர்கள் அல்லது இல்லாததை இருப்பதாகப் பார்த்துவிட்டீர்கள் என்பதாக மாயை என்பதற்குப் பொருள் சொல்லி உங்களுடைய உண்மைத் தன்மையை உங்களுடைய செயல்பாட்டு உறுதியை மறுக்கிற அந்த வார்த்தைகளில் உங்கள் காலத்தை வீணாக்கக்கூடாது என்பதாகத் திருஞானசம்பந்தர் வேதத்திற்கான விடையாகவே திருவீழிமிழலையில் பேசுகிறார்.

திருவீழிமிழலையில் ஏன் வேதத்திற்கான விடையாக அதைப் பேச வேண்டும் என்கின்ற கட்டாயம் இருக்கின்றது என்று கேட்டால் திருவீழிமிழலையில் பிராமணர்கள் கூட்டாக இருந்து அங்கே வேதத்தை வளர்த்தார்கள். அதனால்தான் வேதத்தினால் அடைக்கப்பட்டிருந்த திருமறைக்காட்டுக் கதவைத் திறந்து கடவுளை அனுபவிக்கலாம் என்பதாக மாற்றிக் காட்டுகிறார்கள் சம்பந்தரும் திருநாவுக்கரசரும்.

அந்தத் திருமறைக்காடுதான் இலங்கைக்கு மிக சொந்தமான மிகப்பெரிய அளவில். உடைமைகளைக் கொண்டு ஆரணிய மடத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற ஒரு இடமாக இருக்கிறது. அதையும் கூட நீங்கள் விளங்க வைக்கின்ற வேலை உங்களுக்கு இருக்கின்றது. அதுவும் கூட உலகமயமாதல் போக்கில் இந்த இந்திய அரசோடு நீங்கள் சேர்ந்து அதை விரிவாக உங்களுடைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைவ சித்தாந்தத் துறைக்கும் அல்லது இந்தக் கற்கைமாணிகளுக்குமான ஒரு மிகப்பெரிய உறவுப் பாலமாக அமைப்பதற்கும் கூட நீங்கள் ஏற்பாடு செய்யலாம். அதைப்பற்றியும் கூடப் பல்கலைக்கழகத்தின் மூலமாக இந்திய அரசை நீங்கள் கேட்டுப் பெறலாம்.

(தொடரும்...)

# சண்டிலிப்பாயில் திருக்கோயில் நிர்வாகத்தினருக்கான
# சட்ட வழிகாட்டல் கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், சைவத் திருக்கோயில்கள் மற்றும் சைவ நிறுவனங்களின் நிர்வாகத்தினருக்கான சிறப்பு வழிகாட்டல் கருத்தரங்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 08-07-2026 மிகச் சிறப்பாக நடைபெற்றது. சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. சங்கீதா கோகிலதர்சன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரபல மூத்த சட்டத்தரணி க. வே. சிறிகணேஷராஜன் அவர்கள் முதன்மை வளவாளராகப் பங்கேற்றார். அவர் திருக்கோயில் நிர்வாக நடைமுறைகள், சட்டமுறைமையான ஒழுங்குவிதிகள், நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் அறங்காவலர் நியமங்கள் குறித்த விரிவான சட்ட விளக்கங்களை வழங்கி அடியார்களின் சந்தேகங்களைத் தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்வில் இலங்கை சைவ சமயப் பேரவையின் சார்பில், திருக்கோயில் திருவிழாக் காலத்தில் இடம்பெறும் பண்பாட்டுச் சீர்கேடான களியாட்ட நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துவது குறித்த கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தது. இதற்குப் பதிலளித்த அவர், இது குறித்துத் தாம் கவலையுறுவதாகவும், மாவட்டச் செயலாளருடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்க முயல்வதாகவும் உறுதியளித்தார்.



இக்கருத்தரங்கில் சைவக் குருமார்கள், மாவட்ட இந்து சமய கலாசார உத்தியோகத்தர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் மற்றும் தெல்லிப்பளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த திருக்கோயில் நிர்வாக சபையினர், அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் பிரதேச செயலகச் சமயக் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் திரளாகக் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

**திருச்சிற்றம்பலம்**

## தென்னிந்திய ஆதீனங்களின் இலங்கை வருகை - ஆனி 2026









# தென்னாட்டு நிகழ்வுகள்





சுந்தரர் குருபூசை வழிபாடுகள் (22-07-2026)





ஆடிப்பிறப்பு சிறப்பு வழிபாடுகள் (17-07-2026)



# தென்னாட்டு நிகழ்வுகள்









ஆனித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (29-06-2026)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் எழுபத்து இரண்டாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 13 ஆம் நாள் நிறைமதி அன்று (29-07-2026 புதன்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org